தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.12.2013**

**நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை: பாபநாசம் அணையில் அதிகபட்சம் 63 மி.மீ**

திருநெல்வேலி மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது. பாபநாசம் அணையில் அதிகபட்சம் 63 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாக மிதமான மழை பெய்து வருகிறது. இந்நிலையில், திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது. திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. சாலையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நாள் முழுவதும் குளிர்ச்சியான சூழ்நிலை நிலவியது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியிலும் பலத்த மழை பெய்தது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாபநாசம் அணையில் 63 மி.மீ. மழை பதிவானது.

பிற அணைப்பகுதிகள் மற்றும் இடங்களில் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்): சேர்வலாறு அணை 20, மணிமுத்தாறு அணை 21.4, கடனாநதி அணை 6.8, ராமநதி அணை 61.50, கருப்பாநதி அணை 6, குண்டாறு அணை 9, வடக்குப் பச்சையாறு அணை 11.6, கொடுமுடியாறு அணை 20, அடவிநயினார் அணை 4, பாளையங்கோட்டை 5.2, திருநெல்வேலி 2, நான்குனேரி 16, வீரகேரளம்புதூர் 4, ஆலங்குளம் 5, சங்கரன்கோவில் 31, செங்கோட்டை 31, ராதாபுரம் 8.2, சிவகிரி 3, ஆய்க்குடி 32.6, சேரன்மகாதேவி 4, அம்பாசமுத்திரம் 15.2. பாபநாசம் அணை நீர்மட்டம் 95.30 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 104.07 அடியாகவும்,

மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 70.30 அடியாகவும் இருந்தது. கடனாநதி அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 69 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 61.50 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 61.68 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 9.00 அடியாகவும், நம்பியாறு அணை நீர்மட்டம் 9.84 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 24.00 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 118.00 அடியாகவும் இருந்தது. பாபநாசம் அணைக்கு நொடிக்கு 1112.73 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 202 கனஅடியும், கடனாநதி அணைக்கு 136.42 கனஅடியும், ராமநதி அணைக்கு 45 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 25 கனஅடியும், கொடுமுடியாறு, அடவிநயினார் அணைகளுக்கு தலா 14 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை பெய்தும் அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்த அளவில் உயரவில்லை.

**நெல் மூட்டை ஏலத்தை புறக்கணித்த வியாபாரிகள்**

செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் (ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்) திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பங்கேற்காமல் வியாபாரிகள் திடீரென புறக்கணித்துச் சென்றனர். இதனால் விற்பனைக்கு 3 ஆயிரம் நெல் மூட்டைகளுடன் வந்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

விழுப்புரம் மாவட்ட மார்க்கெட் கமிட்டி நிர்வாகம் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வதாகக் கூறி, ஏலத்தை புறக்கணித்ததாக வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

செஞ்சி மார்க்கெட் கமிட்டிக்கு விவசாயிகள் கொண்டு வரும் நெல்மூட்டைகளை ஏலத்தில் எடுக்கும் சில வியாபாரிகள், முறையாக பணத்தை பட்டுவாடா செய்யாமல் காலதாமதம் செய்வதாக புகார் உள்ளது.

நீண்டகாலமாக தொடரும் இப்பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில், நெல் மூட்டைகளை ஏலம் எடுத்த வியாபாரிகள் அன்றே பணத்தை செலுத்த வேண்டும் என மார்க்கெட் கமிட்டி நிர்வாகம் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையில் அறிவித்தது. ஆனால் இதையும் மீறி சில வியாபாரிகள் பாக்கி வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் சில விவசாயிகள், நெல் மூட்டைகளுக்கு பணத்தை கேட்டு மார்க்கெட் கமிட்டி முன், விஷத்தை குடிக்க முயன்றனர்.

இதையடுத்து அவர்களுக்கு கொள்முதல் பணம் தரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் திங்கள்கிழமை மார்க்கெட் கமிட்டிக்கு சுமார் 3000 நெல் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ஆனால் ஏலத்தில் கலந்து கொள்ள வியாபாரிகள் யாரும் வரவில்லை. ஏலத்தை புறக்கணித்துச் சென்றதால் விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் மணிலா, உளுந்து, எள் உள்ளிட்ட பொருள்களின் ஏலத்தில் வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து வியாபாரிகள் சிலரிடம் கேட்டபோது, நெல் மூட்டைகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய, ஏலம் எடுத்தப் பிறகு 3 நாள்கள் அவகாசம் வேண்டும் என்றும், மாவட்ட கமிட்டி நிர்வாகம் ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்வதாகவும், இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக மார்க்கெட் கமிட்டி நிர்வாகம் ஆலோசனை செய்து வருகிறது. விவசாயிகள் கொண்டுவந்திருந்த நெல் மூட்டைகள் குடவுனில் அடுக்கி வைக்கப்பட்டன.

**மாவட்டத்தில் இரண்டாவது நாளாக மழை**

கடலூர் மாவட்டத்தில் இரண்டாவது நாளாக திங்கள்கிழமை பகலில் பரவலாக மழை பெய்தது.

வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டு கடந்த அக்டோபர் 21ஆம் தேதி பெய்யத் தொடங்கியது. இதைத் தொடர்ந்து வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. கடலூர் மாவட்டத்திலும் மழை பெய்தது. குறிப்பாக மாவட்டத்தின் டெல்டா பாசனப் பகுதிகளான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் பலத்த மழை பெய்தது.

பின்னர் மழை குறையத் தொடங்கியது. கடந்த ஒருவார காலமாக பகலில் வெயிலும் இரவு நேரம் பனிப்பொழிவுடன் கடுங்குளிருமாக இருந்தது. சில நாள் அதிகாலை நேரத்தில் பனிமூட்டமாகவும் இருந்தது.

இந்த நிலையில் தென் கிழக்கு வங்கக்கடலில் இலங்கைக்கு அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதால் மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மழை பெய்து வருகிறது.

திங்கள்கிழமை பகலில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவிலில் கன மழை பெய்தது. வீராணம் ஏரியில் 45.60 அடி தண்ணீர் இருந்தது. அணைக்கு விநாடிக்கு 300 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பதிவான மழை அளவு விவரம்: மே.மாத்தூர் 34, வேப்பூர் 22, லால்பேட்டை 21, சேத்தியாத்தோப்பு 20, காட்டுமயிலூர் 17, கீழச்செருவாய் 14.50, கொத்தாவாச்சேரி, காட்டுமன்னார்கோவில் 13, விருத்தாசலம் 9 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

**இயற்கை பூச்சிக்கொல்லி தயாரிப்பு பயிற்சி**

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் இயற்கை விவசாயம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, இயற்கை பூச்சிக் கொல்லி தயாரிப்பு குறித்து, விவசாயிகளுக்கு திங்கள்கிழமை பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமை வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் ஏ.சுரேஷ் தொடங்கி வைத்தார்.

இயற்கை முறையில் விளைவிக்கப்படும் உணவுப் பொருள்களுக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. இதனைப் பயன்படுத்தி எந்தவொரு பயிருக்கும், ரசாயன பூச்சிக் கொல்லி பயன்படுத்தாமல், இயற்கை முறையிலான பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஆலோசனைகளை வேளாண் அறிவியல் நிலைய தொழில் நுட்ப் பிரிவினர் அளிக்கிறார்கள். விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார்.

நிலைய முதல்வர் ந. ராஜேந்திரன், இயற்கை பூச்சிக் கொல்லி தயாரிப்பு குறித்து விளக்கிப் பேசினார். தாவர பூச்சிக் கொல்லி, இனக் கவர்ச்சிப் பொறி குறித்தும், ஐந்திலை கரைசல் தயாரிப்பு, வேப்பங்கொட்டை கரைசல் தயாரிப்பு குறித்து நிலையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுநர் வி.சுமதி விளக்கிப் பேசினார். நிலையத்தில் தென்னை, சப்போட்டா உள்ளிட்ட பயிர்களுக்கு இயற்கை பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தம் முறைகள் குறித்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் வழங்கல்**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு ரூ. 25.75 லட்சம் மானியத்துடன் ரூ. 74.16 லட்சம் மதிப்பில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், 2013-14 -ம் ஆண்டுக்கான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மூலம், 24 விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள், 11 விவசாயிகளுக்கு மினி டிராக்டர்கள், ஒரு விவசாயிக்கு பல்வகை கதிரடிக்கும் இயந்திரம் ஆகிவற்றை (7 ஆதிதிராவிட விவசாயிகள் உள்பட) 36 விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் வழங்கி பேசியது:

தமிழக அரசின் ஆணைப்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியையும், உற்பத்தி திறனையும் அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சியை அடையும் வகையில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண் தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்கும் விதமாக வேளாண் இயந்திர மயமாக்கல் திட்டம், வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 2013-14 -ம் நிதியாண்டில் 212 வேளாண் கருவிகள் ரூ. 1.52 கோடி மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன. தற்போது மானியத்தில் வழங்கப்பட்டுள்ள பவர் டில்லர்கள், மினி

டிராக்டர்களைக் கொண்டு உழவுப் பணி, களை எடுத்தல் போன்ற விவசாயப் பணிகளுக்கு  பயன்படுத்தி தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்க வேண்டும் என்றார்.

இதில், வேளாண் பொறியியல் துறை  செயற்பொறியாளர் எஸ். அறிவழகன், ஆட்சியரின்  நேர்முக உதவியாளர் (வேளாண்) நாகேந்திரன்,  உதவி செயற்பொறியாளர் வி.ஆர்.ஏ. சிதம்பரம்,  உதவிப் பொறியாளர்கள் வி. பாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**நாகை, திருவாரூரில் பரவலாக மழை**

நாகை, திருவாரூர் மாவட்டங்களில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்தது.

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பலத்த மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்தது.

திருவாரூரில்.... திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, நன்னிலம், குடவாசல் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் திங்கள்கிழமை அதிகாலை தொடங்கிய மழை காலை 9 மணி வரை இடைவிடாமல் பெய்தது.

பின்னர் மதியம் 2 மணி வரை சற்று ஓய்ந்தது. பிற்பகலுக்கு பிறகு மழை தொடர்ந்தது. இதனால் நகர்ப்பகுதிகளிலும் மற்றும் நீர்நிலைகளிலும் தண்ணீர்த் தேங்கியது. நீடாமங்கலத்தில் கடந்த 2 நாள்களாக விட்டு விட்டு மழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இந்த மழை சம்பா பயிர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

நாகையில்... நாகை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் திங்கள்கிழமை பிற்பகல் வரை பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகளவாக தரங்கம்பாடியில் 15 மி.மீ மழை பதிவானது.

திங்கள்கிழமை காலை மயிலாடுதுறை உள்ளிட்ட சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்தது.

நாகையில் பிற்பகல் சுமார் 3.30 மணிக்குப் பெய்யத் தொடங்கிய மழை, மாலை சுமார் 5 மணிக்கு மேலாகவும் நீடித்தது. இதே போல, மயிலாடுதுறை உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பிற்பகல் நேரத்தில் கன மழை பெய்தது.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகளவாக தரங்கம்பாடியில் 15 மி.மீ மழை பதிவானது. மற்றப் பகுதிகளின் மழையளவு (மி.மீட்டரில்) :

சீர்காழி- 11.4, நாகப்பட்டினம்- 9.2, ஆணைக்காரன்சத்திரம் (கொள்ளிடம்)- 8.5, வேதாரண்யம்- 7, மணல்மேடு- 6, திருப்பூண்டி- 3, தலைஞாயிறு- 2.2, மயிலாடுதுறை- 1.

மழையின் காரணமாக திங்கள்கிழமை நாகை மாவட்டத்தில் கடல் சீற்றம் அதிகரித்திருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர். இதனால், மீன்பிடித் தொழிலில் திங்கள்கிழமை லேசான சுணக்கம் உணரப்பட்டது.

**மழையால் சாலைக்கு வந்த வாரச்சந்தையின் அவலம்**

காரைக்காலில் வாரச்சந்தை நடைபெறும் நாளில் மழை பெய்தால், சந்தை சாலைக்கு வர வேண்டிய அவல நிலை உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

காரைக்காலில் ஞாயிற்றுக்கிழமைகளில் முருகராம் நகர் அருகிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான திடலில் வாரச் சந்தை நடைபெற்று வருகிறது. இந்தத் திடலில் கடைகளுக்கு போதுமான கூரைவசதி உள்ளிட்ட தேவையான வசதிகள் செய்து தரப்படவில்லை என வியாபாரிகள் தொடர்ந்து புகார் கூறி வந்தனர்.

அண்மையில் இங்கு ஆய்வு நடத்திய ஆட்சியர் அ. முத்தம்மா, திடலில் சிமென்ட் நடைபாதை, சந்தையருகே உள்ள வடிகால் வாய்க்காலை சுத்தப்படுத்துதல் உள்ளிட்ட சில பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகத்துக்கு உத்தரவிட்டிருந்தார். ஆனால், எந்தப் பணிகளும் நடைபெறவில்லை.

இந்நிலையில், கடந்த 3 வாரங்களாக சந்தை நாளில் மழை பெய்ததால், சந்தைத் திடலில் மழைநீர் தேங்கியது. பொதுமக்கள் நடந்து செல்ல முடியாத அளவுக்கு

சேறும், சகதியுமாக இருந்தது. வியாபாரம் பாதிக்கப்பட்டதால், திருநள்ளாறு சாலையோரத்தில் வியாபாரிகள் வியாபாரம் செய்தனர். இதனால், சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சந்தையில் மழைநீர் தேங்காத வகையில் மண் நிரப்பி சமன் செய்ய வேண்டும். மேலும், இந்த வளாகத்தை மேம்படுத்துவதற்கான பணிகளை நகராட்சி நிர்வாகம் இனியாவது செய்ய வேண்டும் என்பதே வியாபாரிகள், பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## கரும்புக்கு டன்னுக்கு ரூ.4,000 வழங்கக் கோரி டிச.23-இல் விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

கரும்புக்கு டன்னுக்கு ரூ.4,000 தமிழக அரசு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, டிசம்பர் 23ஆம் தேதி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்த தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட ஆலோசனைக் கூட்டம் மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன் தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் கே.குப்புசாமி, கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் ஜி.லோகநாதன் முன்னிலை வகித்தனர்.

மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி, மாநில பொதுச் செயலாளர் கே.சுந்தரம், துணைத் தலைவர் கே.எஸ்.ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கால்நடைத் தீவனம், பராமரிப்பு செலவு உயர்வு காரணமாக பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டருக்கு ரூ.25, எருமைப்பாலுக்கு ரூ.35 விலை நிர்ணயம் செய்வதுடன் கர்நாடகம், புதுச்சேரி மாநிலங்களில் வழங்குவதைப் போல உற்பத்தி மானியம் லிட்டருக்கு ரூ.4 அளிக்க வேண்டும்.

கரும்புக்கு வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகம் ஏற்றுக் கொண்டு டன்னுக்கு ரூ.4,000 விலையை தமிழக அரசு வழங்குவது, கோமாரி நோய் பாதிப்பில்

உயிரிழந்த கால்நடைகளுக்கு தலா ரூ.25,000 அளிப்பதோடு, கால்நடைகளுக்கு இலவச காப்பீடு செய்ய வேண்டும்.

யானை, காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு தொடர்ந்து பாதிப்பு ஏற்பட்டு வருவதால், வனவிலங்குகள் விவசாய நிலங்களில் புகுவதை தடுப்பதோடு, காட்டுப் பன்றிகளை வன விலங்குகள் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, டிசம்பர் 23 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**மழையிலும், வெயிலிலும் கிடப்பதால் எடை குறையும் கரும்பு!**

திருவாலங்காட்டில் உள்ள சர்க்கரை ஆலை வளாகத்தில் கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் கரும்புகள் தேங்குகின்றன.

தேவையைவிட அதிகமாக அளிக்கப்பட்ட வெட்டு உத்தரவால் இந்நிலை என்றும் இதனால் கரும்பின் எடை குறையும் என்கின்றனர் விவசாயிகள்.

அரக்கோணத்தை அடுத்த திருவாலங்காட்டில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை உள்ளது. அரக்கோணம் வட்டத்தை சேர்ந்த கிராமங்களிலிருந்தும் இந்த ஆலைக்கு கரும்பு அனுப்பப்படுகிறது.

நாளொன்றுக்கு 2,400 டன் கரும்பு அரைக்கும் சக்தி கொண்டது. கடந்த 50 நாள்களில் இந்த ஆலையில் ஒரு லட்சம் டன் கரும்பு அரைக்கப்பட்டுள்ளது.

தேவைக்கு அதிகமாக வெட்டு உத்தரவு?

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக ஆலை வளாக மற்றும் ஆலையின் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் கரும்பு வளர்ச்சி அலுவலர்களால் மில் அரவை அளவை மீறி அன்றைய தின தேவைக்கும் அதிகமாக கரும்பு வெட்டு உத்தரவு தினமும் வழங்கப்பட்டு வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனால் விவசாயிகள் தங்களுக்கு கரும்பு வெட்டு உத்தரவு வந்ததும் கரும்புகளை ஆள்களை கொண்டு வெட்ட தொடங்கி அந்த கரும்புகளை லாரி வரும் வரை தங்களது நிலத்திலேயே வைக்கின்றனர். இதனால், கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் கரும்புகள் கிடக்கின்றன.

ஆலை வளாகத்தில்

நிறுத்தப்பட்டிருக்கும் கரும்பு லாரிகள்!

ஆலை வளாகத்துக்குத் தேவைக்கு அதிகமாக கரும்புகள் வந்துவிடுவதால் பணிமனை அதிகாரிகள் லாரிகளுக்கு அனுமதி உத்தரவைத் தராமல் சாலையிலேயே நிறுத்தி வைக்கின்றனர். இதனால் திருவாலங்காட்டில் ஆலை பகுதியின் 4 புறமும் சாலை ஓரங்களில் சுமார் 250-க்கும் மேற்பட்ட லாரிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வெட்டப்பட்ட இடத்தில் சில நாள்கள் காய்ந்து கொண்டு வரப்பட்டு, ஆலை வளாகத்தில் இரு நாள்களுக்கு மேலும் கரும்புகள் மழையிலும் வெயிலிலும் இருப்பதால் கரும்புகளின் எடை குறைந்து போகிறது என விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

விவசாயிகளுக்கு நஷ்டம்!

இதுகுறித்து திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநர் காந்தியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது:

கரும்பு எடை குறைவதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. எனவே ஆலை கரும்பு வளர்ச்சி அதிகாரிகள் வெட்டு உத்தரவு தரும்போது, கவனத்துடன் நடந்து ஆலை தேவைக்கு ஏற்ப வெட்டு உத்தரவை வழங்க வேண்டும். இதில் ஆலை நிர்வாகம் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றார்.

இதுகுறித்து கரும்பு வளர்ச்சி அதிகாரி (பொறுப்பு) ஹரிஷ்கண்ணாவை கேட்டபோது, உயர் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் என்றார்.

**கரும்பு லாரிகளுக்கு சுங்க வரி வசூல்**

ஆம்பூர், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு ஏற்றி வரும் லாரிகளுக்கு தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச் சாவடிகளில் மீண்டும் கட்டணம் வசூலிக்கின்றனர்.

இதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அணைக்கட்டு எம்எல்ஏ ம.கலையரசு வலியுறுத்தினார்.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில், ஆட்சியர் இரா.நந்தகோபாலை சந்தித்து கலையரசு அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

பள்ளிகொண்டா டோல்கேட்டில் கடந்த ஆண்டு கட்டணம் அதிகரிக்கப்பட்ட நிலையில், டோல்கேட் பகுதியைக் கடக்காமல் மாற்றுப் பாதை வழியாக வாகனங்கள் கடப்பதற்காக தனிச் சாலை அமைத்து போராட்டம் நடத்தப்பட்டது.

இப்பிரச்னையில் சுமுகத் தீர்வு காணும் வகையில் 18.1.12-ல் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது, எல் அன்ட் டி செயல் இயக்குநர் விஜய் வெங்கட், டோல்கேட் மேலாளர் நரேஷ் ஆகியோர் பங்கேற்றனர். கரும்பு லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்க மாட்டோம் என இருவரும் உறுதி அளித்தனர். இதையடுத்து, மாற்றுப் பாதை மூடப்பட்டு டோல்கேட் வழியாக அனைத்து வாகனங்களும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் மீண்டும் எல் அன்ட் டி நிறுவனம் கரும்பு லாரிகளுக்கு கட்டணம் செலுத்த வற்புறுத்தி வருகிறது.

பல்வேறு பிரச்னைகளில் விவசாயிகள் சிக்கித் தவிக்கும் நிலையில், இந்த கட்டாய கட்டண வசூலால் மேலும் பாதிப்பை சந்திப்பர். எனவே கரும்பு லாரிகளுக்கு விதிவிலக்கு அளிக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

**கோமாரியால் இறந்த பசுக்களுக்கு இழப்பீடு கேட்டு ஆர்ப்பாட்டம்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு, இறந்த பசுக்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, சங்கத்தின் மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

மாவட்டம் முழுவதும் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பசுக்கள் இறந்துள்ளன. ஏராளமான பசுக்கள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இறந்த பசுக்களின் உரிமையாளர்கள் தங்களது குடும்பத்துக்கான வருமானத்துக்கு வழி தெரியாமல் திண்டாடி வருகின்றனர். எனவே இறந்த பசுக்களின் உரிமையாளர்களுக்கு தமிழக அரசு உரிய இழப்பீட்டுத் தொகையை உடனே வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**23 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**

மேட்டுப்பாளையம் பகுதியில் இதுவரை 23,625 கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மேட்டுப்பாளையம் கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர் ரங்கசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது:மேட்டுப்பாளையம் வட்டாரத்தில் கடந்த அக்டோபர் 19-ஆம் தேதி முதல் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடங்கியது. மேட்டுப்பாளையம் நகராட்சி, காரமடை ஒன்றியத்திற்கு உள்பட்ட 19 ஊராட்சிகளிலும் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்றது. இதில் 22,880 மாடுகளுக்கும், 745 எருமைகளுக்கும் என மொத்தம் 23,625 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் குறித்த அறிகுறிகள் எதுவும் இல்லை.

**பயிர் காப்பீடு பிரீமியத்தை அரசே செலுத்தக் கோரிக்கை**

தென் மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையை தமிழக அரசே செலுத்த வேண்டும் என உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து தமிழக முதல்வர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியருக்கு இயக்கத்தின் மாநிலத் தலைவர் பா.சிவக்குமார் அனுப்பியுள்ள கோரிக்கை மனு.

சிவகங்கை, கடலூர், நாமக்கல் மாவட்டங்களில் அக்ரிக்கல்சர் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனம், மேம்பட்ட தேசிய விவசாய காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. 2012இல் சிவகங்கை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி

செய்த விவசாயிகள் 69ஆயிரம் பேர் காப்பீடு திட்டத்தின் மூலம் ரூ.5 கோடி பிரீமியமாக செலுத்தி உள்ளனர். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து விட்டதால் பாதிக்கப்பட்ட சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு ரூ.75 கோடியை வறட்சி நிவாரணமாக வழங்கியது.

இதில் பதிவு செய்த 69ஆயிரம் விவசாயிகளில் 54 ஆயிரம் பேருக்கு மட்டுமே இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிவகங்கை, காளையார்கோவில், கல்லல், சாக்கோட்டை, கண்ணங்குடி, மானாமதுரை, திருப்புவனம், திருப்பத்தூர் ஆகிய பகுதிகளில் வறட்சி ஏற்பட்ட பல கிராமங்கள் கணக்கெடுப்பில் விடுபட்டுள்ளன. ஒரு சில கிராமங்களில் பிரீமியம் செலுத்திய அளவு தொகையைக் கூட இழப்பீடாக அறிவிக்கவில்லை. சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான இழப்பீடு வழங்க காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு உத்தரவிட வேண்டும்.

பாதிக்கப்பட்ட டெல்டா விவசாயிகளுக்கு தமிழக அரசு பயிர் காப்பீட்டிற்கான பிரீமியத் தொகையை செலுத்தியதைப் போல நடப்பாண்டில் தென் மாவட்டங்களில் சாகுபடி மேற்கொண்டுள்ள அனைத்து விவசாயிகளுக்குமான பிரீமியத் தொகையை அரசு செலுத்த வேண்டும். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிவகாசியில் 6 மி.மீ. மழை**

சிவகாசியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 6 மி.மீ. மழை பெய்துள்ளது. அதே தினம் சாத்தூரில் 12 மி.மீ. மழையும், ஸ்ரீவில்லிபுத்தூரில் 4.மி.மீ. மழையும், ராஜபாளையத்தில் 7 மி.மீ. மழையும், வத்திராயிருப்பில் 10 மி.மீ மழையும் பெய்துள்ளது.

அதே போல், வெம்பக்கோட்டை அணைப் பகுதியில் 5.8 மி.மீ. மழையும் பிளவக்கல் அணைப் பகுதியில் 7 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

**கமுதி பகுதியில் மழை**

கமுதி பகுதியில் 2-ஆவது நாளாக திங்கள் கிழமையும் மழை பெய்தது.

மழை காரணமாக ஏற்கனவே முளைத்து பயிராக உள்ள நெல், சோளம், பருத்தி, நிலக்கட லை, உழுந்து உள்ளிட்ட பயிர்கள் செழிப்புடன் வளர வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஆனாலும் கண்மாய்களில் தண்ணீர் பெருகும் அளவில் மழை பெய்ய வேண்டும் என்றும் அல்லது அடுத்தடுத்து மழை பெய்தால்தான் பயிர்கள் முழுமையான சாகுபடி மகசூல் லாபம் பெற முடியும் என்றும் மேலும் அவர்கள் கூறினர்.

**ராமநாதபுரத்தில் பலத்த மழை: இயல்பு வாழ்க்கை பாதிப்பு**

ராமநாதபுரத்தில் திங்கள்கிழமை அதிகாலை முதல் இரவு வரை தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் இயல்பு வாழ்க்கை பாதிக்கபட்டது.

ராமநாதபுரத்தில் திங்கள்கிழமை பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதிகாலை முதல் இரவு வரை பலத்த மழை தொடர்ந்து பெய்து கொண்ட இருந்தது. இதன் காரணமாக நகரில் அரசு மருத்துவமனை சாலை,தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் பாரதிநகர், நாகநாதபுரம், தங்கப்பா நகர் ஆகிய தாழ்வான பகுதிகள் முழுவதும் சாலையில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருந்தது. தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்ததால் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்லும் மாணவ, மாணவியர், அரசு ஊழியர்கள் உள்பட பலரும் மிகுந்த அவதிக்கு உள்ளாகினர். இயல்பு வாழ்க்கையும் பாதித்தது. ராமநாதபுரம் நகர் மற்றும் கிராமங்களில் உள்ள கண்மாய்களிலும் ஓரளவு தண்ணீர் நிரம்பியிருக்கிறது.விவசாயிகளும் ஓரளவு மகிழ்ச்சியடைந்துள்ளனர். திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி ராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன், மண்டபம் ஆகிய பகுதிகளில் அதிக அளவு மழை பெய்துள்ளதாகவும், கடலாடி, வட்டானம், தீர்த்தாண்டதானம் ஆகிய பகுதிகளில் மழை பெய்த அளவு மிகவும் குறைவாகவும் இருந்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையளவு(மி.மீட்டரில்) ராமநாதபுரம்- 29.70, ராமேசுவரம்-25.20, பரமக்குடி9.80, கமுதி-6.80, முதுகுளத்தூர்- 42, திருவாடானை-7.50, மண்டபம்-72.40, கடலாடி-6, பாம்பன்-86, ஆர்.எஸ்.மங்கலம்-28, தங்கச்சி மடம்- 46, வட்டானம்- 5, வாலிநோக்கம்-10.6, பல்லமோர்குளம்- 12, தீர்த்தாண்டதானம்-6. மாவட்டத்தில் மொத்த மழையளவு- 402.80, சராசரி மழையளவு-28.18.

**"கோமாரியால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு தேவை**

கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று கொட்டவாக்கம் கிராமத்தினர் மனு அளித்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை மக்கள் குறைதீர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் காஞ்சிபுரத்தை அடுத்த பரந்தூர் அருகே கொட்டவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள், ஏழுமலை, சரோஜா, காசி, ஆறுமுகம் உள்ளிட்டோர் மனு அளித்தனர். அதன் விவரம்: காஞ்சிபுரம் வட்டம், கொட்டவாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் வளர்த்து வந்த பசு, எருமை உள்ளிட்ட 10 மாடுகள் கோமாரி நோய் ஏற்பட்டு உயிரிழந்துள்ளது. எனவே உயிரிழந்த மாடுகளுக்கு அரசு வழங்கும் உதவித்தொகையை அளித்து உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

**கரும்புகள் தேக்கம் :விவசாயிகள் வேதனை**

திருவாலங்காட்டில் உள்ள சர்க்கரை ஆலை வளாகத்தில் கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும் கரும்புகள் தேங்குகின்றன.

தேவைக்கு அதிகமாக வெட்டு உத்தரவுக் காரணமாக தேக்க நிலை உருவாவதால் கரும்பின் எடை குறைந்து நஷ்டத்தை ஏற்படுத்துகிறது என்று விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

திருவாலங்காட்டில் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அரக்கோணத்தை சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து கரும்பு அனுப்பப்படுகிறது.

நாளொன்றுக்கு 2,400 டன் கரும்பு அரைக்கும் சக்தி கொண்ட இந்த ஆலையில் கடந்த 50 நாள்களில் ஒரு லட்சம் டன் வரை கரும்பு அரைக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக ஆலை வளாக மற்றும் ஆலையின் பிரிவு அலுவலகங்களில் பணிபுரியும் கரும்பு வளர்ச்சி அலுவலர்களால் மில் அரவை அளவை மீறி, அன்றைய தின தேவைக்கும் அதிகமாக கரும்பு வெட்டு உத்தரவு தினமும் வழங்கப்படுதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த உத்தரவு காரணமாக கரும்புகளை வெட்டி லாரி வரும் வரை தங்களது நிலத்திலேயே வைக்கின்றனர்.

இதனால் மழையிலும், வெயிலிலும் கரும்புகள் கிடக்கின்றன.

ஆலை வளாகத்துக்குத் தேவைக்கு அதிகமாக கரும்புகள் வந்துவிடுவதால் பணிமனை அதிகாரிகள் லாரிகளுக்கு அனுமதி உத்தரவை அளிக்காமல் இருப்பதால் சாலையிலேயே லாரிகள் நிறுத்தப்படுகின்றன. இதனால் திருவாலங்காட்டில் ஆலை பகுதியின் 4 புறமும் சாலை ஓரங்களில் சுமார் 250-க்கும் மேற்பட்ட லாரிகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

வெட்டப்பட்டு நிலத்திலும், ஆலை வளாகத்திலும் கரும்புகள் தேங்கிவிடுகிறது. மழையிலும் வெயிலிலும் இருப்பதால் கரும்புகளின் எடை குறைந்து போகிறது என விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

இதுகுறித்து திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநர் காந்தி கூறியதாவது:

கரும்பு எடை குறைவதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது.

எனவே ஆலை கரும்பு வளர்ச்சி அதிகாரிகள் கவனத்துடன், ஆலை தேவைக்கேற்ப வெட்டு உத்தரவை வழங்க வேண்டும். இதில் ஆலை நிர்வாகம் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றார்.

இதுகுறித்து கரும்பு வளர்ச்சி அதிகாரி (பொறுப்பு) ஹரிஷ்கண்ணாவை கேட்டபோது, உயர் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளுங்கள் என்றார்.

**வங்கக் கடலில் மீண்டும் புயல் அபாயம்**

வங்கக் கடலில் நிலைக் கொண்டிருக்கும் தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 3 நாள்களில் புயலாக மாற வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வங்கக் கடலில் இலங்கை மற்றும் தமிழக கடல் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது இப்போது தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளது.

இதன் காரணமாக அடுத்த 24 மணிநேரத்தில், இந்த தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மேலும் வலுப்பெறும். அடுத்த 72 மணி நேரத்தில் இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறும் அபாயம் உள்ளது.

மற்றொரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி: தென்கிழக்கு வங்கக் கடலில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஞாயிற்றுக்கிழமை உருவானது. இதுவும் வலுவடைந்து வருகிறது.

இதுவும் தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதி புயலாக மாறும்போது, புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதியும் அதனுடன் இணைந்துவிடும்.

இரு காற்றழுத் தாழ்வும் வங்கக் கடலின் தெற்கு பகுதியில் அருகருகில் உள்ளன. இவை புயலாக மாறும்போது ஆந்திரம் மாநிலம் நோக்கி நகராது. தமிழக கடற்கரை பகுதியிலேயே கரையை கடக்க்கூடும்.

இதன் எதிரொலியாக தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவையில் கனமழை பெய்யும். இந்த மழை மேலும் சில நாள்களுக்கு தொடரும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.வானிலை முன்னறிவிப்பு: தமிழக கடலோர பகுதிகள் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் செவ்வாய்க்கிழமை கனமழை பெய்யும். உள்தமிழகத்தின் சில இடங்களில் கனமழை பெய்யும்.சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக காணப்படும். சில இடங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும்.

திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணிநேரத்தில் தமிழகத்தில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்): எண்ணூர் - 100, பாம்பன் - 90, பாபநாசம் - 60, காரைக்கால், குன்னூர் - 50, செங்கோட்டை, சங்கரன்கோயில், திருவாரூர், கேளம்பாக்கம், சத்தியமங்கலம், ராமநாதபுரம், ராமேஸ்வரம் - 30, தென்காசி, குழித்துறை, மணிமுத்தாறு, கோத்தகிரி, விழுப்புரம், கழுகுமலை, சோழவரம், செங்குன்றம், பொன்னேரி, துறையூர் - 20, அம்பாசமுத்திரம், தரங்கம்பாடி, மன்னார்குடி, ஸ்ரீவைகுண்டம், பவானிசாகர், திருச்செந்தூர், மகாபலிபுரம், சீர்காழி, குளச்சல், கோவில்பட்டி, ஒட்டபிடாரம், நாகர்கோயில், ஒரத்தநாடு, மேட்டுப்பாளையம், பரமக்குடி, நாகப்பட்டினம், தொண்டி, விருதாச்சலம், செங்கல்பட்டு, திண்டுக்கல், பெரம்பலூர் - 10.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**03.12.2013**

## வெங்காயம் ஏற்றுமதி விலையை குறைக்க பரிந்துரை : அதிக வரத்தால் விலை குறைந்துள்ளது

மும்பை: கடந்த ஒரு சில தினங்களாக, வெங்காயத்தின் விலை, கடந்த ஐந்து மாதங்களில் இல்லாத அளவிற்கு குறைந்துள்ளது. இதையடுத்து, வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை குறைக்க வேண்டும் என, மத்திய வேளாண் அமைச்சகம், அரசுக்கு பரிந்துரை செய்து உள்ளது.

பணவீக்கம்உற்பத்தி குறைந்து, சந்தைகளுக்கு வரத்து சரிவடைந்தததால், பல மாநிலங்களில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 100 ரூபாயை தாண்டியது. இதனால், நாட்டின் பணவீக்கம் அதிகரித்ததுடன், பல மாநில அரசுகளுக்கு கடும் பிரச்னையை ஏற்படுத்தியது.இந்நிலையில், கடந்த ஒரு சில வாரங்களாக, வெங்காயம் அதிகளவில் உற்பத்தியாகும், மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும்ஆந்திரா ஆகிய மாநிலங்களிலிருந்து, வரத்து அதிகரித்துள்ளதால், மகாராஷ்டிராவில் உள்ள லசல்கான் சந்தையில், தற்போது, ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை, 1,700 ரூபாயாக சரிவடைந்துள்ளது.

இது, கடந்த ஜூலை மாதம் 1ம் தேதி, 1,690 ரூபாயாக இருந்தது. நடப்பாண்டு செப்டம்பர் 17ம் தேதி, இச்சந்தையில், இதன் விலை, 5,500 ரூபாயாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.உற்பத்திஅண்மையில் முடிவுற்ற கரீப் பருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயம், சந்தைகளுக்கு அதிகளவில் வரத் துவங்கியுள்ளது. கடந்தாண்டு கரீப் பருவத்தை விட, நடப்பாண்டு கரீப் பருவத்தில் இதன் உற்பத்தி, சிறப்பான அளவில் அதிகரித்து உள்ளது. இதனால், இதன் விலை மேலும் சரிவ-

டையும் என, தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

சென்ற மாதம் 1ம் தேதி சந்தை களுக்கு, வெங்காயம் வரத்து, 7,500 டன்னாக இருந்தது. இது, சென்ற மாத இறுதியில், 15 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளது.தற்போது, சில்லரை விற்பனையில், டில்லியில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 46 ரூபாய்க்கும், மும்பையில், 62 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.

இதுகுறித்து, தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தும் அமைப்பின் இயக்குனர் சி.பீ. கோல்கர் கூறியதாவது:கரீப் பருவத்தில், வெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதையடுத்து, நாட்டின் பல சந்தைகளுக்கு வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், இதன் விலை படிப்படியாக குறையத் துவங்கியுள்ளது.நடப்பு ரபி பருவத்திலும், வெங்காயம் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இதனால், இனி வரும் மாதங்களில், இதன் விலை மேலும் சரிவடையத் துவங்கும்.அதேசமயம், ஒரு குவிண்டால் வெங்காயத்தின் விலை, 1,000 ரூபாய்க்கும் கீழ் குறையும் நிலையில், அது, விவசாயிகளுக்கு இடர்பாட்டை ஏற்படுத்தும்.

இவ்வாறு அவர் கூறினார்.ஏற்றுமதி விலைஉள்நாட்டில், வெங்காயத்தின் விலை வரலாறு கணாத அளவிற்கு உயர்ந்ததையடுத்து, மத்திய அரசு, கடந்த நவம்பர் 1ம் தேதி, ஏற்றுமதிக்கான, ஒரு டன் வெங்காயத்தின் விலையை, 1,150 டாலராக உயர்த்தியது. இதன்படி, இதற்கும் குறைவான விலையில் ஏற்றுமதி மேற்கொள்ள முடியாது.

இதற்கு முன்பாக, ஏற்றுமதிக்கான ஒரு டன் வெங்காயத்தின் குறைந்தபட்ச விலை, 900 டாலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.இருப்பினும், ஐந்து மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறுவதால், மத்திய அரசு, வெங்காயத்தின் ஏற்றுமதி விலையை குறைப்பது குறித்து முடிவெடுக்காது.

மலேசியா:பார்லிமென்ட் கூட்டத் தொடர், வரும் 5ம் தேதி துவங்குகிறது.எனவே, இம்மாதம் 15ம் தேதிக்கு பிறகே, ஏற்றுமதிக்கான வெங்காயத்தின் விலையை

குறைப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என, சந்தை வட்டாரத்தினர் தெரிவித்-தனர்.உலகளவில், இந்திய வெங்காயத்தின் சுவை நன்கு இருப்பதால், மேற்காசிய நாடுகள், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில், இந்திய வெங்-காயத்திற்கு அதிக வரவேற்பு உள்ளது.

கடந்த 2012–13ம் வேளாண் பருவத்தில், நாட்டின் வெங்காயம் உற்பத்தி, 1.63 கோடி டன்னாக குறைந்திருந்தது. இது, இதற்கு முந்தைய பருவத்தில், 1.75 கோடி டன்னாக இருந்தது. நடப்பு பருவத்தில், உள்நாட்டில் இதன் உற்பத்தி நன்கு இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

## மேட்டூர் நீர் மட்டம் 2 நாளில்1 அடி சரிவு

மேட்டூர்: நீர் வரத்து சரிந்ததால், கடந்த, இரு நாளில் மேட்டூர் அணை நீர்மட்டம், ஒரு அடி சரிந்தது. காவிரி நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் அடைந்ததால், வினாடிக்கு, 5,249 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து, கடந்த வாரம் வினாடிக்கு, 16,000 கனஅடியாக அதிகரித்தது. கூடுதல் நீர் வரத்தால், 84 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த, 29ம் தேதி, 85.450 அடியாக உயர்ந்தது. இந்நிலையில், நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று நீர்வரத்து வினாடிக்கு, 3,705 கனஅடியாக சரிந்தது. வினாடிக்கு, 5,000 கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கும் நிலையில், நீர்மட்டம் நேற்று, 84.150 அடியாக குறைந்தது. நீர்வரத்து சரிந்ததால், கடந்த இரு நாட்களில், மேட்டூர் அணை நீர்மட்டம், ஒரு அடி சரிந்துள்ளது.

## விதை ஆய்வு அதிகாரி எச்சரிக்கை காலாவதி விதை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை

சேலம்: காலாவதியான விதைகளை விற்பனை செய்யக்கூடாது என, வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் சவுந்தர்ராஜன் வெளியிட்ட அறிக்கை: விதை விற்பனை நிலையங்களில், விதை விற்பனை உரிமத்தை விவசாயிகள் பார்வைக்கு வைக்க

வேண்டும். விதைகளின் பெயர், ரகம், குவியல் எண், இருப்பு அளவு, விலை ஆகிய விபரங்கள் எழுதி வைக்க வேண்டும். விதை வாங்கும் போது விற்பனை பட்டியல் வழங்க வேண்டும். விதைகளை உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் இல்லாத இடங்களில் தனியாக இருப்பு வைக்க வேண்டும். பதிவேட்டில் விதைகள் எங்கிருந்து வாங்கப்பட்டது என்ற விவரத்தையும், பயிர் வாரியாக, ரகம் வாரியாக, கொள்கலன் வாரியாக இருப்பு வைத்து பராமரிக்க வேண்டும். விதை குவியல்களுக்கு, தரப்பரிசோதனை அறிக்கை வைத்திருப்பது சிறப்பு. காலாவதியான விதை குவியல்களை, விற்பனைக்கு வைக்கக்கூடாது. இருப்பில் உள்ள விதைகள் காலாவதியாகி விட்டால், தனி பதிவேட்டில் பதிவு செய்து, விற்பனைக்கு அல்லாதது என்று தனியாக வைக்க வேண்டும். சீரான வளர்ச்சியுடன் பூத்து, முதிர்ந்து, ஒரே சமயத்தில் அறுவடை செய்ய ஏதுவாக, கலப்படமில்லாத, அதிக மகசூல் தரக்கூடிய தரமான விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்து, வேளாண் உற்பத்திக்கு உறுதுணையாக அனைத்து விதை விற்பனையாளர்களும் செயல்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### ஏமாற்றிய மழை விவசாயிகள் கவலை

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் பகுதியில் வானம் மேக மூட்டதுடன் காணப்பட்டாலும் மழை வராததால் விவசாயிகள் மிகுந்த ஏமற்றம் அடைந்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி, கச்சிராயபாளையம், சின்னசேலம், தியாகதுருகம், சங்கராபுரம் சுற்று வட்டார பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக விளங்கி வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த மழையினால் நிலத்தடி நீர்மட்டம் ஓரளவே உயர்ந்தது. ஹெலன் புயலின் போது மழையை எதிர்பார்த்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

தற்போது கிணற்று நீர் பாசன விவசாயிகள் மட்டுமே பயிர் செய்து வருகின்றனர். தற்போது வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகத்தில் மழை பெய்யும் என்று விவசாயிகள் ஆர்வமுடன் காத்திருந்தனர். நேற்று முன் தினம் காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் மழை பெய்யும் என்று விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

ஆனால் தூறல் மட்டுமே விழுந்தது. இதனால் விவசாயம் செய்வது

கேள்விக்குறியாகவே உள்ளது. இனியாவது மழை பெய்யுமா என்ற ஏக்கத்தில் விவசாயிகள் உள்ளனர்.

## பாமாயில் அறுவடை பயிற்சி

திருக்கோவிலூர்:திருக்கோவிலூரில் வேளாண்துறை, கோத்ரேஜ் அக்ரோவில் இணைந்து பாமாயில் அறுவடை செய்ய பயிற்சி அளிக்கப்பட்டது.
திருக்கோவிலூர் பகுதியில் பாமாயில் மரம் வளர்க்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். பாமாயில் மரத்தின் தோகைகளை ஒழுங்குபடுத்துவது, விதைகளை அறுவடை செய்வது பற்றி கீழத்தாழனூரில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
செல்வராஜ் என்பவரது நிலத்தில் பயிர் செய்யப்பட்டிருந்த பாமாயில் தோட்டத்தில் திருக்கோவிலூர் வேளாண் உதவி இயக்குனர் அன்பழகன், கோத்ரேஜ் அக்ரோ ராஜன் பயிற்சியளித்தனர்.
இதற்காக 5 பேரை தேர்வு செய்து பாமாயில் மரங்களில் இருந்து விதைகளை எடுப்பது குறித்து பயிற்சி மற்றும் அதற்கான சாதனங்களை வழங்கினார்கள்.
பாமாயில் மரம் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்டும் முறைகள் பற்றியும், அரசு வழங்கும் மானியம் குறித்து விளக்கம் அளிக்கப் பட்டது.
நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேளாண்துறை மற்றும் பாமாயில் விதைகளை கொள்முதல் செய்யும் கோத்ரேஜ் அக்ரோ நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## கரும்பு விவசாயிகள் 7ம் தேதி ஆலோசனை

விழுப்புரம்:முண்டியம்பாக்கம் கரும்பு விவசாயிகள் சங்க பேரவை கூட்டம் வரும் 7ம் தேதி விழுப்புரம் கரும்பு விவசாயிகள் மண்டபத்தில் நடக்கிறது.
மதியம் 2:30 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்தாண்டு கரும்பு அரவை பருவத்திற்கு விலை கோருதல், வெட்டு கூலியை ஆலையாரே ஏற்று கொள்ளுதல், செம்மேடு சர்க்கரை ஆலைகளில் கரும்பு யார்டுகளை புதுப்பித்தல் உள்ளிட்ட பொருள்கள் பற்றி விவாதிக்கப்படுகிறது.
இதில், முண்டியம்பாக்கம், செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் பங்கேற்க வேண்டுமென செயலளர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

## உர விற்பனையாளர்களுக்கு வேளாண்மை அலுவலர் எச்சரிக்கை

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் உள்ள உரக்கடைகளில் வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் திடீரென ஆய்வு மேற்கொண்டார்.
மரக்காணம் வட்டாரத்தில் 12 ஆயிரம் ஏக்கர் சம்பா நெல்பயிர், ஆயிரத்து 250 ஏக்கர் உளுந்து, பத்தாயிரம் ஏக்கர் மணிலா மற்றும் கரும்பு ஆகியவற்றை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது அனைத்து பயிர்களும் வளர்ச்சி நிலையில் உள்ளதால் விவசாயிகளுக்கு உரங்கள் அதிகளவில் தேவைப்படுகிறது. உர வியாபாரிகள் உரங்களை பதுக்கிவைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்வதாக புகார் எழுந்தது.
இதையடுத்து வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் நேற்று திண்டிவனம், முருக்கேரி, ஆலங்குப்பம் பகுதிகளில் உள்ள உரக்கடை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் உள்ள உரக் கிடங்குகளில் திடீர் ஆய்வு நடத்தினார். வேளாண்மை அலுவலர்கள் சரவணன், எத்திராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.
பின் அவர் கூறியதாவது:
விவசாயிகள் அனைவரும் விவசாய பணிகளை மேற்கொள்வதால் உரம், பூச்சிகொல்லி மருந்துகளின் தேவைகள் அதிகரித்துள்ளது. இது போன்ற சமயங்களில் உரக்கடை உரிமையாளர்கள் உரங்களை பதுக்கி வைத்து உரத் தட்டுப்பாடு என கூறி விலையை உயர்த்தி விற்கின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கின்றனர்.
திண்டிவனம் பகுதியில் உள்ள அனைத்து உரக்கடை மற்றும் கிடங்குகளில் திடீர் சோதனை செய்து வருகிறோம். விலையை உயர்த்தியும், தரமற்ற உரத்தை விற்பனை செய்தால் உரிமத்தை ரத்து செய்து கோர்ட்டில் வழக்கு தொடரப்படும். விவசாயிகள் புகார்கள் தெரிவிக்க 95006 10513 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## கோமாரி நோய்க்கு சிகிச்சை: கலெக்டர் எச்சரிக்கை

திருவண்ணாமலை: கால்நடை மருத்துவம் படிக்காதவர்கள் கோமாரி நோய் பாதித்த மாடுகளுக்கு சிகிச்சை அளித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என,

கலெக்டர் ஞானசேகரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.இது குறித்து கலெக்டர் ஞானசேகரன் வெளியிட்டுள்ள அறிக்கை:திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த, இரண்டு மாதங்களாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு அரசு கால்நடை உதவி மருத்துவர்கள் கொண்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.இவ்வாறு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால், பாதிக்கப்பட்ட கால்நடைகள் விரைவில் குணமடைந்து வருகிறது. கோமாரி நோய் மேற்கொண்டு பரவாமல் இருக்க அனைத்து கால்நடைகளுக்கும் விடுபடாமல் தடுப்பூசி போடும் பணிகள் அனைத்து கிராமங்களிலும் நடைபெற்று வருகிறது. ஆனால் சில கிராமங்களில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கால்நடை உதவி மருத்துவருக்கு தகவல் அளிக்காமல் போலி கால்நடை மருத்துவர்கள், தவறான சிகிச்சை அளித்து வருவதால், இம்மாவட்டத்தில் கால்நடைகள் இறக்க நேரிடுகிறது. மேலும் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் விவரம் கால்நடை பராமரிப்புத்துறை தெரிவிக்காத காரணத்தினால் கோமாரி நோய் மேலும் பரவ வாய்ப்பாக அமைகிறது. கடந்த மாதம், 27ஆம் தேதி ஆரணியில் செல்வி என்பவருக்கு சொந்தமான கறவை மாடு, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் செயற்கை முறை கருவூட்டலுக்கு மட்டும் பயிற்சி பெற்ற நந்தகுமார், மற்றும் சங்கீதா ஆகியோரின் தவறான சிகிச்சையினால் இறக்க நேரிட்டது.இம்மாதிரியான சம்பவங்கள் மீண்டும் நடக்காமல் தவிர்க்க அரசு கால்நடை உதவி மருத்துவர்களை மட்டும் கொண்டு பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு முறையான சிகிச்சை அளிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.மேலும் கால்நடை மருத்துவக்கல்வி பயிலாதவர்கள் கோமாரி நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொட்டவாக்கத்தில் கோமாரி நோய் தாக்குதல்

வாலாஜாபாத்:கோமாரி நோய் தாக்குதலால், கொட்டவாக்கம் கிராமத்தில், அடுத்தடுத்து, மாடுகள் இறந்து வருகின்றன.

காஞ்சிபுரம் அடுத்த, கொட்டவாக்கம் பகுதியில், கோமாரி நோய் தாக்குதலால், கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு, இருவரின் பசுமாடுகள் இறந்துள்ளன.

இதுகுறித்து, அப்பகுதி வாசிகள் கூறுகையில், 'கடந்த ஒரு வாரமாக, மாடுகளுக்கு

கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்டு, மாடுகள் இறந்து வருகின்றன. நேற்று முன்தினம் கூட இருவரின் பசுமாடுகள் இறந்துள்ளன. இதுவரையில், 10 மாடுகள் இறந்துள்ளன. தடுப்பு நடவடிக்கைக்கு கால்நடைத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

கால்நடைத்துறை உதவி இயக்குனர் ராஜன்சி ஆண்டனி கூறுகையில், "புள்ளலுாரில் கோமாரி நோய் தாக்கத்தை தொடர்ந்து, சுற்றியுள்ள கிராமங்கள் முழுவதும் 1,400 தடுப்பூசிகளை, மருத்துவக்குழுவினர் போடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இருப்பினும், அங்கு ஆய்வு செய்து, தடுப்பூசிகள் போடாத மாடுகளுக்கு, ஊசிபோடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்,"என்றார்

### மழையால் மகிழ்ச்சி

கோத்தகிரி: நீலகிரி மாவட்டத்தில், கடந்த ஆண்டை காட்டிலும், நடப்பாண்டு மழையின் அளவு குறைவு. குறிப்பாக, கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் மழை மிக குறைந்த அளவே பெய்துள்ளது.

இந்நிலையில், கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில், கடந்த இரண்டு நாட்களாக ஓரளவு மழைப்பெய்து வருகிறது. இதனால், தேயிலை தோட்டங்களுக்கு விவசாயிகள் உரமிடுவதில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

மழை தொடரும் பட்சத்தில், பசுந்தேயிலை மகசூல் கணிசமாக உயருவதற்கான வாய்ப்புள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கல்வி பயிற்சி முகாம்

### நிரம்பி வரும் கெத்தை அணை

மஞ்சூர்: மழையால் கெத்தை அணை நிரம்பி வருகிறது.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இப்பகுதியை சுற்றியுள்ள அப்பர்பவானி, எமரால்டு, அவலாஞ்சி, குந்தா, கெத்தை அணைகள் போதுமான அளவில் தண்ணீர் சேகரமாகி வருகிறது. கிண்ணக்கொரை, இரியசீகை பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்ததால் நீரோடைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. நீரோடைகளிலிருந்து வரும் தண்ணீர் கெத்தை அணைக்கு வருவதால் அணையின் மொத்த அடியான 154 அடியில் 152.5 அடியில் தண்ணீர்

சேகரமாகியுள்ளது. கெத்தை அணையில் தண்ணீர் அதிகரிப்பதால் பரளி, பில்லூருக்கு தடையின்றி தண்ணீர் கொண்டு செல்லப்படுவதால், மின் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது.

### விவசாய கடன்

மஞ்சூர்: குந்தா தொடக்க வேளாண்மை
கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகளுக்கு 50 லட்சம் ரூபாய் விவசாய கடன் வழங்கப்பட்டது. குந்தா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், அப்பகுதியை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது, நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் விவசாய கடன் வேண்டி விண்ணப்பித்திருந்தனர். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு சுமார் 40 லட்சம் ரூபாய் வரைக்கு கடன் வழங்கப்பட்டது. வங்கி செயலாளர் ரத்தினா விவசாயிகளுக்கு கடன் வழங்கினார்.

### குற்றச்சாட்டு! வியாபாரிகளின் ஆதிக்கத்தில் உழவர் சந்தை வாய் திறக்க அச்சப்படும் சிறு விவசாயிகள்

ஊட்டி:"ஊட்டி உழவர் சந்தையில், வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது' என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
நீலகிரி மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில், ஊட்டி உழவர் சந்தைக்கு "மவுசு' அதிகம். தினமும், 100க்கணக்கான மக்கள், இங்கு காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். அதே நேரம், உழவர் சந்தையின் செயல்பாடுகளில், சில சர்ச்சைகள் நீடிக்கின்றன.
"உழவர் சந்தையில், வியாபாரிகளின் ஆதிக்கம் அதிகரித்து உள்ளது; மார்க்கெட்டில் காய்கறி கடை வைத்திருக்கும் சிலர், தங்களது "பினாமி'களாக சிலரை, உழவர் சந்தையில் கடை அமைத்து காய்கறிகளை விற்கின்றனர்; அதேபோல, மேட்டுப்பாளையம் பகுதிகளை சேர்ந்த சில வியாபாரிகள் உள்ளனர்; இதனால், கிராமப்புறங்களில் இருந்து வரும் சில உண்மையான விவசாயிகளுக்கு கடைகள் கிடைக்காமல், பிளாட்பாரத்தில் கடை வைத்து வியாபாரம் செய்ய

வேண்டியுள்ளது' என்ற குற்றச்சாட்டை சில விவசாயிகள் முன்வைக்கின்றனர். "ஒரு சிலர் மார்க்கெட்டில் இருந்து தான் காய்கறிகளை உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்கின்றனர். இதனை சம்பந்தப்பட்டவர்கள் கண்டுக்கொள்வதில்லை;இதை தவிர, ஊட்டி நகராட்சி மார்க்கெட் காய்கறி கடைகளுக்கும், உழவர் சந்தை கடைகளுக்கும் பெரிய விலை வித்தியாசங்கள் இல்லை' எனவும், கூறப்படுகிறது.

சுழற்சி முறை இல்லை

மேலும், ஒரு கடையில் வியாபாரம் செய்பவருக்கு, அடுத்த நாள் அடுத்த கடை வழங்க வேண்டும். இத்தகைய சுழற்சி முறை, பின்பற்றப்படாததால், ஒரே கடையில், பட்டா வழங்கியது போன்று விவசாயிகள் சிலர் காய்கறி வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். இது குறித்து நிர்வாக தரப்பில் கூறுகையில்,"உழவர் அடையாள அட்டை வைத்துள்ளவர்களை தவிர்த்து, வெளி நபர்களுக்கு காய்கறி கடை அமைக்க அனுமதி வழங்குவதில்லை. காய்கறி கடை அமைக்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால், சிலர் பிளாட்பாரங்களில் விற்பனை செய்ய வேண்டியுள்ளது' என்றனர்.

விசாரணை நடந்தால் மாறும்...

சொந்தமாக தோட்டம் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே, உழவர் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன; அந்த அட்டைகள் வைத்துள்ளவர்கள் மட்டுமே உழவர் சந்தையில் காய்கறிகளை விற்பனை செய்ய முடியும். அந்த வகையில், ஊட்டி உழவர் சந்தையில், விவசாயிகள் போர்வையில், வியாபாரிகள் பலர் வியாபாரம் செய்வதாக எழுந்துள்ள சர்ச்சையை தொடர்ந்து, "உழவர் அடையாள அட்டைகள் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறதா', என்பது குறித்த விசாரணை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மாவட்ட நிர்வாகம் பிறத்தால், உண்மையான சிறு விவசாயிகள் பயன்பெற வாய்ப்புள்ளது.

## பாபநாசம் அணைப்பகுதியில் 63 மி.மீ., மழை

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையில் நேற்று 63 மி.மீ., மழை பெய்தது. காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப்பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையின் காரணமாக நேற்று பாபநாசம் அணைக்கு அணையின் நீர் பிடிப்பு பகுதிகளிலிருந்து சற்று கூடுதலாக தண்ணீர் வந்தது. நேற்று காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 63 மி.மீ., மழை விநாடிக்கு 1112 கன அடிநீர் வந்து அணையின் நீர்மட்டம் 95.30 அடியானது. அணையிலிருந்து 1004.75 கன அடிநீர் வெளியேறியது. சேர்வலாறு அணை பகுதியில் 20 மி.மீ., மழை பெய்து அணையின் நீர்மட்டம் 104.07 அடியானது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 202 கன அடிநீர் வந்து 35 கன அடி நீர் வெளியேறி அணையின் நீர்மட்டம் 70.30 அடியாக இருந்தது. நேற்று பாபநாசம் கீழ் அணையில் 23 மி.மீ., அம்பையில் 15.2 மி.மீ., மணிமுத்தாரில் 21.4 மி.மீ., சேரன்மகாதேவியில் 4 மி.மீ., என்ற அளவில் மழையின் அளவு பதிவாகியிருந்தது.

## காற்றழுத்த தாழ்வு நிலை கை கொடுக்குமா, மாவட்ட விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஆர்.எஸ்.மங்கலம் : புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

மாவட்டத்தில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் எக்டேரில் செப்டம்பர் கடைசி வாரத்தில் நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. 90 முதல் 120 நாட்களில் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்கள் தற்பொழுது 50 முதல் 65 நாட்களை எட்டியுள்ளது. வட கிழக்கு, தென்மேற்கு பருவ மழைகள் விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. இதனால், திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், தேவிபட்டினம், நாரல், சோழந்தூர், பரமக்குடி, நயினார்கோவில் உள்ளிட்ட பல பகுதிகளில் தண்ணீர் இன்றி நெல் பயிர்கள் கருகி வருகின்றன.

தென்கிழக்கு வங்கக் கடலில் ஆந்திர கடற்கரைக்கு அப்பால் நிலைகொண்டிருந்த "லெஹர்' புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், மாவட்டத்தில் இரண்டு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படுகிறது.

ஒரு சில இடங்களில் லேசான தூறல் பெய்து வருகிறது. ஆனால், இந்த தூறலால் நெற்பயிருக்கு எந்தவித பயனுமில்லை. புதிதாக உருவாகிய காற்றழுத்த தாழ்வு நிலையால் எதிர்பார்த்த மழை பெய்யுமா? பெய்யாதா என்ற எதிர் பார்ப்புடன் விவசாயிகள் உள்ளனர்.

தேவிபட்டினம், விவசாயி சினிவாசன்: கடந்த இரண்டு நாட்களாக லேசான மழை தூறல் விழுந்து வருகிறது. வானம் மேக மூட்டத்துடன் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டும் போதிய மழை இல்லை. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்த, நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவித்து வருகிறேன். மழை பெய்தால் அதிக மகசூல் கிடைக்கும், என்றார்.

## காற்றழுத்த தாழ்வு நிலை கை கொடுக்குமா, மாவட்ட விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஆர்.எஸ்.மங்கலம் : புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்த விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்துள்ளனர்.

மாவட்டத்தில் ஒரு லட்சத்து 36 ஆயிரம் எக்டேரில் செப்டம்பர் கடைசி வாரத்தில் நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. 90 முதல் 120 நாட்களில் விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்கள் தற்பொழுது 50 முதல் 65 நாட்களை எட்டியுள்ளது. வட கிழக்கு, தென்மேற்கு பருவ மழைகள் விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. இதனால், திருவாடானை, ஆர்.எஸ்.மங்கலம், தேவிபட்டினம், நாரல், சோழந்தூர், பரமக்குடி, நயினார்கோவில் உள்ளிட்ட பல பகுதிகளில் தண்ணீர் இன்றி நெல் பயிர்கள் கருகி வருகின்றன.

தென்கிழக்கு வங்கக் கடலில் ஆந்திர கடற்கரைக்கு அப்பால் நிலைகொண்டிருந்த "லெஹர்' புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதால், மாவட்டத்தில் இரண்டு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படுகிறது.
ஒரு சில இடங்களில் லேசான தூறல் பெய்து வருகிறது. ஆனால், இந்த தூறலால் நெற்பயிருக்கு எந்தவித பயனுமில்லை. புதிதாக உருவாகிய காற்றழுத்த தாழ்வு நிலையால் எதிர்பார்த்த மழை பெய்யுமா? பெய்யாதா என்ற எதிர் பார்ப்புடன் விவசாயிகள் உள்ளனர்.

தேவிபட்டினம், விவசாயி சினிவாசன்: கடந்த இரண்டு நாட்களாக லேசான மழை தூறல் விழுந்து வருகிறது. வானம் மேக மூட்டத்துடன் மப்பும் மந்தாரமுமாக

காணப்பட்டும் போதிய மழை இல்லை. ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்த, நெற்பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவித்து வருகிறேன். மழை பெய்தால் அதிக மகசூல் கிடைக்கும், என்றார்.

### பயிர்களை காப்பாற்ற வயலில் ஆழ்துளை அமைப்பு

ஆர்.எஸ்.மங்கலம்: ஆர்.எஸ்.மங்கலம் அருகே நெல் பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் வயல்களில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து வருகின்றனர். திருவாடானை தாலுகாவில் 39 ஆயிரம் எக்டேரில் 90 முதல் 120 நாட்களில் விளைச்சல் தரக்கூடி "டீலக்ஸ்' ரக பொன்னி, ஜே.சி.எல்.,- என்.எஸ்.ஆர்., போன்ற நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர் முளைப்பு செய்தது முதல் களை எடுப்பு, உரமிடுதல் என, ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். நெல் பயிர்கள் 60 முதல் 75 நாட்களை எட்டியுள்ள நிலையில் பருவ மழை ஏமாற்றத்தால், நெல் பயிர்களை காப்பாற்ற வயலில் ஆழ்துளை கிணறு அமைக்கும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்பொழுது, ஆர்.எஸ்.மங்கலம், செங்குடி, இந்திராநகர், ஆவரேந்தல், பாரனூர், கலங்காப்புளி, உள்ளிட் சுற்றுப்புற கிராமங்களிலும் ஏராளமான விவசாயிகள் இந்த ஆழ்துளை கிணறு அமைக்கும் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் விவசாயி பால்சாமி கூறுகையில்,"" இது வரை ஒரு ஏக்கர் நெல்பயிருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். மழையை நம்பி விவசாயம் செய்யும் நம்பிக்கையை இழந்து விட்டதால், கூடுதலாக ரூ. 15 ஆயிரம் செலவு செய்து ஆழ்துளை கிணறு அமைத்து வருகிறோம். மோட்டார் பம்பு செட் மூலம் வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச முடிவு செய்துள்ளோம். மேலும், ஆழ்துளை கிணறு அமைத்துள்ள விவசாயிகளிடம், சிறு விவசாயிகள் மணிக்கு ரூ.120 வரை கொடுத்து தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

### கோதுமை நிறுத்தம்

மூணாறு: கேரளாவில் ரேஷன் கடைகள் மூலம் மாதம் தோறும் ஏ.பி.எல்., கார்டுகளுக்கு, 6 கிலோ மற்றும் மானியம் பெறும் கார்டுகளுக்கு, 3 கிலோ வீதம் கோதுமை வழங்கப்பட்டு வந்தது.அரிசி விலை உயர்வாலும், ஆரோக்கியம் கருதியும் கோதுமையை அதிகளவில் பயன்படுத்தி வந்தனர்.

தேவிகுளம் தாலுகாவில் ஏ.பி.எல்., ரேஷன் கார்டுகள் அதிகமாக உள்ளதால், கோதுமை பயன்படுத்துவோரின் எண்ணிக் கை அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில், எவ்வித முன் அறிவிப்பும் இன்றி,ரேஷன் கடைகள் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வந்த கோதுமையை அரசு திடீரென நிறுத்திவிட்டது.இதனால் பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோதுமையை மீண்டும் வழங்க வேண்டும், என தேவிகுளம் ரேஷன் டீலர்ஸ் சங்கத் தலைவர் புரோஸ்கான் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

### வைகை ஆறு வறண்டதால் நெல் நாற்றுகள் விற்பனை

தேனி: வைகை ஆறு வறண்டதால், கரையில் உள்ள வயல்களில் நடவு செய்ய முடியாமல் விவசாயிகள் நாற்றுகளை விற்பனை செய்து வருகின்றனர்.
வடகிழக்கு பருவமழை காரணமாக வைகை ஆற்றில் அக்., நவ., டிச., மாதங்களில் வெள்ளப்பெருக்கு இருக்கும். இந்த வெள்ளப்பெருக்கில் குன்னூர் பகுதியில் உள்ள செங்குளம் நிறைந்து தண்ணீர் மறுகால் பாய்ந்து, மீண்டும் வைகை அணைக்கே வந்து சேரும். இந்த தண்ணீர் மூலம் இப்பகுதியில் உள்ள வயல்களில் நெல் விவசாயம் நடக்கும்.
நடப்பு ஆண்டும் வைகை அணையில் வழக்கம் போல் தண்ணீர் வரும், கண்மாய்கள் நிறையும், என நம்பிய விவசாயிகள் நாற்றுகளை விதைத்தனர். வழக்கமாக இந்த நாற்றுகளை 15 நாளில் பறித்து நடவு செய்ய வேண்டும். ஆனால் மழை குறைவால் வைகையில் நீர் வரத்து இல்லாமல், கண்மாய்கள் நிறையவில்லை. எனவே வயல்களுக்கு நீர் கிடைக்கவில்லை.
இதனால் விதைத்த நாற்றுகளை நடவு செய்ய முடியவில்லை. 40 நாட்களுக்கும் மேல் நாற்றுகள் ஆகியுள்ள நிலையில், வேறு வழியின்றி குச்சனூர் பகுதியில் உள்ள வயல்களில் நடுவதற்காக, இந்த நாற்றுகளை விற்பனை செய்து வருகின்றனர். குன்னூர் பகுதியில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டு விட்டதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

### எக்டருக்கு 8 டன் நெல் மகசூல்முதல் போக அறுவடையில் தகவல்

கம்பம்,: கம்பம் பள்ளத்தாக்கில், முதல் போக அறுவடை முடிவிற்கு வந்துள்ளது. எக்டருக்கு அதிகபட்சமாக 8 டன் வரை மகசூல் கிடைத்திருப்பதாக, விவசாயிகள் கூறியுள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூர் முதல் பழநிசெட்டிபட்டி வரை, 14 ஆயிரத்து 707 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. முல்லைப் பெரியாறு

பாசனத்தில் மேற்கொள்ளப்படும், இருபோக சாகுபடியில், முதல் போக சாகுபடி அறுவடை தற்போது முடிவிற்கு வந்துள்ளது. மழை பெய்தாலும், அறுவடை இயந்திரங்களின் உதவியால், பிரச்னையின்றி விவசாயிகள் அறுவடை முடித்துள்ளனர். முதல் போக அறுவடை குறித்து, விவசாய சங்க நிர்வாகிகள் கூறியதாவது:

குழிக்கு (60 சென்ட்) 32 மூடை (ஒரு மூடை 60 கிலோ) கிடைத்துள்ளது. ஒரு எக்டருக்கு 8 டன் வரை அதிகபட்ச மகசூல் கிடைத்துள்ளது. மொத்த பரப்பில் திருந்திய நெல் சாகுபடி 30 சதவீதம் பேர் மட்டுமே மேற்கொண்டுள்ளனர். திருந்திய நெல் சாகுபடி செய்தவர்களுக்கு, வேண்டுமானால் மகசூல் கொஞ்சம் அதிகமாக கிடைத்திருக்கும்.

விவசாயத்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள சோதனை திடலில் மகசூல் எடுப்பதை வைத்து, மகசூல் மதிப்பீடு செய்வது தவறானது. சராசரியாக விவசாயிகளுக்கு எக்டருக்கு 8 டன் மட்டுமே கிடைத்துள்ளது. அதிலும் விலையை பொறுத்தவரை கடந்த ஆண்டு மூடைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிடைத்தது. இந்த ஆண்டு மூடைக்கு விலை 780 முதல் 800 வரை மட்டுமே கிடைத்துள்ளது. எனவே, விலையும் எங்களுக்கு கிடைக்கவில்லை.இயந்திர அறுவடை என்பதால், வைக்கோலும் விற்பனை செய்ய முடியவில்லை,என்றனர்.

## வைகை அணையில் தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி : மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக வைகை அணையில் இருந்து நேற்று மீண்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. வைகை அணையின் நீர் பிடிப்பு பகுதியான வருஷநாடு மலைப்பகுதியில் போதுமான அளவு மழை பெய்யவில்லை. பெரியாறு அணையில் இருந்து, திறந்து விடப்பட்ட நீர் மட்டுமே வைகை அணையில் தேக்கப்பட்டு, செப்.,25 முதல் மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்கு திறக்கப்பட்டது.

அணையில் நீர் இருப்பை கருத்தில் கொண்டு, முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டது. திறக்கப்பட்ட நீர் நவ.,3ல் நிறுத்தப்பட்டது. மீண்டும் நவ.,15ல் அணை திறக்கப்பட்டு, வினாடிக்கு 1600 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டது. நீர் மட்டம் 43 அடியாக குறைந்ததால்,

நீர் இருப்பை கருத்தில் கொண்டு நவ.,20ல் மீண்டும் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. கடந்த 12 நாட்களாக, வந்த நீரால் அணை நீர் மட்டம் நேற்று 46.78 அடியாக உயர்ந்தது. மொத்த உயரம் 71 அடி. நீர் வரத்து 318 கன அடியாக இருந்தது. இதையடுத்து மதுரை, திண்டுக்கல் மாவட்டங்களின் பாசனத்திற்காக, வினாடிக்கு 1600 கன அடி நீர் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. தவிர மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக 60 கன அடி வெளியேறுகிறது.

### தக்காளி விலை சரிவு

திண்டுக்கல் :ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தக்காளி, வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால் விலைசரிந்துள்ளது. தமிழகத்தில் கடந்த இரண்டாண்டாக பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாததால், விவசாயம் பாதிக்கப்பட்டது. இதனால் காய்கறி விளைச்சல் குறைந்ததால் தக்காளி, வெங்காயம் உள்ளிட்டவை விலை

அதிகரித்தது. தக்காளி கிலோ ரூ.50 முதல் 55 வரையிலும், பெரிய வெங்காயம் ரூ.60க்கும், சின்ன வெங்காயம் ரூ.70 முதல் 75 வரை விற்கப்பட்டது. இந்நிலையில் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தக்காளி, வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் தக்காளி கிலோ ரூ.15 க்கும், பெரிய வெங்காயம் ரூ.25 க்கும், சின்ன வெங்காயம் ரூ.40 க்கும் விற்கப்பட்டது. திண்டுக்கல் காந்தி மார்க்கெட் வியாபாரி தேவதாஸ் கூறியதாவது: ஆந்திரா, கர்நாடகா வரத்தால் விலை மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது, என்றார்.

### பட்டாணி விலை விர்ர்...

திண்டுக்கல் :காய்ந்த பட்டாணி பெங்களூரு, மைசூருவில்இருந்து கொண்டு வரப்படுகிறது. விளைச்சல் இல்லாததால், வரத்து கணிசமாக குறைந்துள்ளது.இதனால், கடந்த வாரம் சந்தையில் கிலோ ரூ. 120க்கு விற்ற பட்டாணி, தற்போது ரூ.300க்கு விற்க படுகிறது. ஒரே வாரத்தில் கிலோவிற்கு ரூ. 180 வரை விலை அதிகரித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**3.12.2013**

**போச்சம்பள்ளியில் கொத்தமல்லி கட்டு ரூ5 ; புதினா 2 கட்டு ரூ5 க்கு விற்பனை போட்டி போட்டு வாங்கிச் சென்றனர்**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் கொத்தமல்லி, புதினா விலை சரிந்தது. ஒரு கட்டு கொத்தமல்லி ரூ5 க்கும், 2 கட்டு புதினா ரூ5 க்கும் விற்பனை ஆனதால், பொதுமக்கள் போட்டி போட்டு கொண்டு வாங்கி சென்றனர்.

கிருஷ்ணகிரி மாவட் டம், போச்சம்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் வாரச்சந்தை பிரசித்தி பெற்றதாகும். தங்கம் முதல் தக்காளி வரை இங்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று நடைபெற்ற சந்தையில் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்தனர். இதில், சூளகிரி பகுதியில் இருந்து கொத்தமல்லி, புதினா தழை வரத்து அதிகளவில் இருந்தது. இதனால் கடந்த வாரம் ரூ10க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டு கொத்தமல்லி தழை, நேற்று ரூ5 ஆக குறைந்தது. இதே போல் புதினா இரண்டு கட்டு ரூ5 க்கு விற்பனை ஆனது. மருத்துவ குணம் கொண்ட கொத்தமல்லி, புதினாவை சட்னி செய்து சாப்பிட்டால் பித்தம், வாந்தி, அஜீரண கோளாறு மற்றும் வயிற்றுப்புண் குணமாகும் என்பதாலும், ரத்தம் சுத்திகரிக்கும் என்பதாலும், பொதுமக்கள் கொத்தமல்லி, புதினா கட்டுகளை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

**நிலக்கடலை வரத்து சரிவு 110 மூட்டையாக**

இடைப்பாடி, : கொங்கணாபுரத்தில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் நிலக்கடலை வரத்து சரிந்தது. சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர் விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பருத்தி மற்றும் நிலக்கடலை ஏலம் நடைபெறுவது வழக்கம். இதில் சேலம், ஈரோடு, நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் இருந்து விவசாயிகளும், வியாபாரிகளும் கலந்து கொள்வர். நேற்று நடைபெற்ற ஏலத்தில் நிலக்கடலை வரத்து சரிந்தது. கடந்த வெள்ளிக்கிழமை 160 மூட்டையாக இருந்த நிலக்கடலை நேற்று 110 மூட்டைகளாக குறைந்தது. ரூ.702 முதல் ரூ.1072 வரை விற்பனை செய்யப்பட்ட ஈரப்பதம் 60 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ.660 முதல் ரூ.1125 வரையிலும், ரூ.1200 முதல் ரூ.2025 வரை விற்பனை செய்யப்பட்ட உலர் நிலக்கடலை 60 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ.1250 முதல் ரூ.2070 வரையிலும் விலை கிடைத்தது. இதன் மூலம் கடந்த வெள்ளிக்கிழமை ரூ.2 லட்சத்திற்கு நடைபெற்ற வர்த்தகம் ரூ.80 ஆயிரமாக குறைந்தது.

**வரத்து குறைவால் தக்காளி விலை ‘கிடுகிடு’ உயர்வு**

திண்டுக்கல், :கார்த்திகை மாதத்தில் சபரிமலை, பழநிக்கு செல்லும் பக்தர்கள் மாலை அணிந்து விரதத்தை துவக்குவது வழக்கம். இதனால் காய்கறிகளுக்கு டிமாண்ட் ஏற்பட்டு விலை விண்ணை தொடும். மீன், மட்டன், கோழி இறைச்சிகள் விலை குறையும். விற்பனையும் மந்தமாக இருக்கும்.

திண்டுக்கல் மா வட்டத்தை பொறுத்தவரை நேற்று காய்கறிகளின் விலை சற்று கூடுதலாக இருந்தது. முகூர்த்த நாளாக அமைந்த தும் ஒரு முக்கிய காரணம். திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் தக்காளி நேற்று ரூ.35க்கு விற்றது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை ரூ.30க்கு விற்ற தக்காளி தற்போது ரூ.5 வரை உயர்ந்துள்ளது. உழவர் சந்தையில் ரூ.33 வரை விற்றது. போதிய மழையில்லாததால் தக்காளி விளைச் சல் பாதித்துள்ளது. இத னால் மாவட்டத்தின் பல பகுதிகளில் தக்காளி வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு தக்காளி விளைச்சல் அதிகரித்து காணப்பட்டது.

பறிக்கும் தொழிலாளர்களுக்கு ரூ.100 வரை தினக் கூலி தர வேண்டியிருந்த தால், விவசாயிகள் தக்கா ளி யை செடியிலேயே பறிக்காமல் விட்டு விட்டனர். இதனால் ஒரு கிலோ தக் கா ளி ரூ.3, 4 என விற்று வந்தது. தற்போது விளச்சல் குறை வால் விலை அதிகரித்துள்ளது.

**பயிர் இன்சூரன்ஸ் கணக்கெடுப்பு முறைகளை மாற்ற வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

சிவகங்கை, : பயிர் இன்சூரன்ஸ் கணக்கெடுப்பு விதிமுறைகளை மாற்ற வேண்டும் என விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் 521 வருவாய் கிராமங்கள்(குரூப்) உள்ளன. கடந்த ஆண்டில் மாவட்டம் முழுவதும் பயிர் இன்சூரன்ஸ் செய்த 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளில் 54,136 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதற்காக ரூ34.50 கோடி ஒதுக்கப்பட்டது. மொத்தமுள்ள வருவாய் கிராமங்களில் சுமார் 200 வருவாய் கிராமங்களுக்கு பயிர் இன்சூரன்ஸ் இழப்பீட்டுத் தொகை வழங்காமல் கணக்கெடுப்பில் குளறுபடி நடந்துள்ளதாக புகார் எழுந்தது. சில குரூப்புகளில் 0.1சதவீத முதல் 10சதவீதம் வரையிலான இழப்பீடு மட்டுமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். மாநில அரசு செயற்கைக்கோள் விபரப்படி ஒரு குரூப்பில், நான்கு இடங்களில் கணக்கெடுக்கும்படி அதற்கான சர்வே எண்களை அனுப்புகிறது. இவ்வாறு ஆய்வு செய்யும் முறையிலும் குழப்பமே ஏற்படும் என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி கூறுகையில், பயிர் இன்சூரன்ஸ் இழப்பீடு வழங்க அரசு அனுப்பும் சர்வே எண்களையுடைய வயல்களில், கிணற்று பாசனம் உள்ள வயல்கள் இருந்தால் அதை எப்படி அந்த குரூப்பில் உள்ள அனைத்து விவசாய நிலத்திற்கான கணக்காக ஏற்க முடியும். கிணற்று பாசன நிலத்தை கணக்கில் வைத்து அந்தப்பகுதி முழுவதும் விளைந்துள்ளதாக எழுதி விடுகின்றனர். இந்த முறையை மாற்ற வேண்டும். குறிப்பிட்ட கிராமங்களில் மட்டும் ஆய்வு நடத்தாமல் அனைத்து கிராமங்களிலும் விவசாயிகள், வருவாய்த்துறையினர், உள்ளாட்சி பிரதிநிதிகளுடன்,

வேளாண்துறையினர் விளைச்சல் குறித்து ஆய்வு நடத்த வேண்டும். அனைத்து கிராமங்களிலும் ஆய்வு செய்யாமல், இழப்பீடு வழங்கும் இன்சூரன்ஸ் கம்பெனியின் விதிமுறைகளை பின்பற்றாமல் இருப்பதாலேயே இதுபோன்ற குளறுபடி நிலவுகிறது என்றார்.

**கோதுமை வரத்தால் விலை குறைகிறது**

புதுடெல்லி: மொத்த விலை சந்தைக்கு கோதுமை வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வாங்குவதை மாவு மில்கள் குறைத்துள்ளதால், கோதுமை விலை குறையத் தொடங்கியுள்ளது. குவிண்டாலுக்கு ரூ.5 விலை குறைந்துள்ளது. ஆனால், மற்ற தானியங்களின் விலை அதேநிலையில் நீடிக்கிறது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: கோதுமை வரத்து அதிகரித்துள்ளது. மாவு மில்கள் அரவைக்கு வாங்கும் அளவும் குறைந்துள்ளது. இதனால், கோதுமை விலை குறையத் தொடங்கியுள்ளது.

தலைநகர் டெல்லியில் மாவு மில்களுக்கு சப்ளை செய்யப்படும் கோதுமை விலையில் குவிண்டாலுக்கு ரூ.5 குறைந்து உள்ளது. ரூ.1,595ல் இருந்து ரூ.1,590க்கு சப்ளை செய்ப்படுகிறது. கோதுமை வினியோகத்தில் 90 கிலோ ரூ.1,6051,610க்கு விற்கப்படுகிறது.

**தமிழகம் முழுவதும் பரவலாக பெய்த மழையால் குளிர்ந்த சீதோஷ்ணம்**

ஆட்டையாம்பட்டி, : சேலம் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்ததால், குளிர்ச்சியான சீதோஷ்ணம் நிலவியது. ஏற்காட்டில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, 2 நாட்களுக்கு மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனிடையே, சேலம் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. ஏற்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு மழை பெய்த நிலையில், நேற்று பகல் முழுவதும் கடும் பனி மூட்டம் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் மழையும் பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இடைத்தேர்தலையொட்டி ஏற்காட்டில் முகாமிட்டுள்ள அரசியல் கட்சியினர் மழையில் நனைந்தவாறே தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டனர்.

ஆட்டையாம்பட்டி பகுதியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் சுமார் 1 மணி நேரம் நல்ல மழை பெய்தது. தாரமங்கலம் பகுதியில் நேற்று அதிகாலை நேரத்தில் பலத்த மழை பெய்தது. இதையடுத்து, பகல் முழுவதும் வானம் மப்பும், மந்தாரமுமாக காணப்பட்டதால் ஜில் என்ற சீதோஷ்ண நிலை நிலவியது.

ஜலகண்டாபுரத்திலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலை, மாலை நேரத்தில் சாரல் மழை பெய்தது. நங்கவள்ளியில் நாள் முழுவதும் வானில் கரிய மேகக்கூட்டம் திரண்டிருந்தது. மேட்டூரில் நேற்று முன்தினம் இரவு மழை பெய்த நிலையில், நேற்று பகல் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஓமலூர் பகுதியில் காலை முதலே வானில் கரிய மேகக்கூட்டம் திரண்ட நிலையில், பிற்பகல் 3 மணியளவில் சிறிது நேரம் மழை பெய்தது.
சங்ககிரி பகுதியில் மாலை வேளையில் சிறிது நேரம் பெய்த மழையால் குளிர்ந்த சீதோஷ்ணம் நிலவியது. ஆத்தூர் மற்றும் தலைவாசல் பகுதியில் மாலை 6.30 மணியளவில் சாரல் மழை பெய்தது. இளம்பிள்ளையில் மாலை 4 மணியளவில் சிறு தூரலுடன் பெய்த மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.
மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்த நிலையில், இடைப்பாடி, பூலாம்பட்டி, கொங்கணாபுரம் பகுதியில் சிறு துளி கூட விழாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

## அணையின் நீர்மட்டம் 86 அடியாக அதிகரித்துள்ளது

திருவண்ணாமலை, :சாத்தனூர் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து உள்ளதால், அணையின் நீர்மட்டம் 86 அடியாக அதிகரித்துள்ளது.
கடந்த சில நாட்களாக பெய்த மழையால், திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணைக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 119 அடியாகும். அதில், கடந்த 16ம் தேதி அணையின் நீர்மட்டம் 82.80 அடியாக இருந்தது. தென்பெண்ணை ஆற்றின் வழியாக தொடர்ந்து தண்ணீர் வருவதால், நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 86.05 அடியாக அதிகரித்துள்ளது.மேலும், அணையின் நீர்கொள்ளளவு 2,047 மில்லியன் கன

அடியாக அதிகரித்துள்ளது. அணைக்கு வினாடிக்கு தற்போது 603 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழை தற்போது குறைந்துவிட்டது. எனவே, அணைக்கான நீர்வரத்து படிப்படியாக குறையும் வாய்ப்புள்ளது. எனவே, வட கிழக்கு பருவமழை மீண்டும் கைகொடுத்தால் மட்டுமே அணை முழுமையாக நிரம்புவதற்கான வாய்ப்புள்ளது.

**கத்தரியை தாக்கும் அந்துப்பூச்சி கட்டுப்படுத்த வழிமுறைகள் தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்**

தோகைமலை : தோகை மலை பகுதி விவசாயிகள் கத்திரியை தாக்கும் காய்துளைப்பானை உரிய முறை யில் கட்டுப்படுத்துமாறு தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

கத்தரி சாகுபடி செய்யப்படும் அனைத்து இடங்களிலும் கத்திரி இளந்தண்டு மற்றும் காய்துளைப்பான் தாக்குதல் மிக அதிகமாக காணப்படும். இதன் காரணமாக கத்திரி நட்ட 20 நாட்களிலிருந்து அறுவடை முடியும் வரை தொடர்ந்து பூச்சிக்கொல்லிகளை விவசாயிகள் அதிகளவில் பயன்படுத்துகிறார்கள். இதனால் சுற்றுப்புற சூழல் மாசு அடைகிறது. இந்த பூச்சியானது கத்திரி, உருளைக்கிழங்கு, பாகல், பச்சைப்பட்டானி, மணத்தக்காளி, சுண்டை, கண்டங்கத்திரி மற்றும் ஊமத்தை செடிகளை தாக்குகிறது.

சேதஅறிகுறி: கத்தரி நடவு செய்து சுமார் 15 முதல் 20 நாட்களிலிருந்து இந்த புழுவின் தாக்குதல் தொடங்குகிறது. புழுக்கள் செடிகளின் நுனிக் குருத்தின்கீழ் துளைத்து உள்பகுதியை உண்பதால் குருத்துப்பகுதி வாடி காய்ந்து விடுகிறது. பின்பு பூக்கும் மற்றும் காய்க்கும் தருணத்தில் பூ மொட்டுகள், பூக்கள் மற்றும் பிஞ்சுக் காய்களையே இந்த புழு தாக்குகிறது. இதனால் மகசூல் 75 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது. தாக்கப்பட்ட காய்களின் மேல் துவாரங்கள் காணப்படும். இந்த துவாரங்களின் மேல் புழுவின் கழிவுப் பொருட்கள் தள்ளப்பட்டிருப்பதை காணலாம்.

காய்துளைப்பான் பூச்சி: கத்தரி இளந்தண்டு மற்றும் காய்த்துளைப்பான் ஒரு வருடத்தில் பல வாழ்க்கை சுழற்சிகளை மேற்கொள்கிறது. இதனால் வருடம்

முழுவதும் இப்பூச்சியின் தாக்குதல் காணப்படும். தாய் அந்துப்பூச்சியானது வெண்நிற இறக்கைகளை கொண்டது. இறக்கைகளின் மேல் பழுப்பு கலந்த சிவப்பு நிறக்கோடுகள் காணப்படும். ஒரு தாய் அந்து பூச்சி சுமார் 80 முதல் 250 முட்டைகள் வரை இடும். முட்டைகள் இலை யின் பின்புறம் குருத்துக்கள், பூ மற்றும் காய்களின் புள்ளி வட்டங்களில் காணப்படும். முட்டைகள் தட்டையாகவும், வெள்ளையாகவும் இருக்கும் முட்டைப்பருவம் 3 முதல் 4 நாட்கள். இளம்புழுக்கள் வெண் நிறமாக இருக்கும்.முட்டையிலிருந்து வெளிவந்த 6 மணி நேரத்திற்குள் இந்த புழு குருத்து அல்லது காய்களை துளைத்து உள்ளே சென்று விடும். பெரும்பாலும் குருத்துகளைவிட இப்புழுக்கள் காய்களையே விரும்பி உண்ணும். வளர்ச்சி அடைந்த புழுக்களின் உடல் இளஞ்சிவப்பு நிறமாகவும், தலை பழுப்பு நிறமாகவும் இருக்கும். புழுப்பருவம் 15 முதல் 17 நாட்களாகும். உடலின் மீது சிறிய மெல்லிய உரோமங்களை உடையதாக இருக்கும்.

கட்டுப்பாடு முறைகள்: கத்திரியை மட்டும் தொடர்ந்து பயிரிடாமல் தானியங்கள், பயறு வகைகள் கொண்ட பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்ய வேண்டும். கத்தரி செடியின் வயல்களிலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் வளரும் கண்டங்கத்திரி ஊமத்தை செடிகளை அழித்திட வேண்டும். இனக்கவர்ச்சிப் பெரிகள் ஏக்கருக்கு 12 வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

பூச்சிக்கொல்லி மருந்து: தாக்குதல் அதிகமாக காணப்படும் நேரங்களில் வேப்பங்கொட்டைசாறு 5 சதவீதம் அல்லது புரபனோபாஸ் 50 இசி ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி அல்லது தயோடியோகார்ப் 75மி ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் அல்லது கார்பரில் நனையும் தூள் ஏக்கருக்கு 400 கிராம் என்ற அளவிலும் தெளித்து கட்டுப்படுத்தலாம். பூக்கும் தருணத்தில் மாலத்தியான் 50 இசி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் 15 நாட்கள் இடைவெளியில் தெளித்து கட்டுப்படுத்தலாம். மருந்து தெளிக்கும் போது காய்களை பறித்துவிட்டு தெளிக்க வேண்டும்.இந்த நடைமுறைகளை கடைபிடித்து கத்திரி காய்த்துளைப்பானை உரிய முறையில் கட்டுப்படுத்தி கத்திரி சாகுபடியில் அதிக மகசூல் பெறுமாறு தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**வேளாண் சிறுதொழில் தொடங்க மானியம் நட்பமைப்பு திட்ட அதிகாரி தகவல்**

கரூர், : வேளாண் சிறுதொழில்களை தொடங்குவதற்கு சிறு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு துவங்கப்பட்டிருக்கிறது. சிறு விவசாயிகள் இதன் மூலம் சிறுதொழில்கள் தொடங்கலாம். பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுறவு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து அறுவடை பின்செய்நேர்த்தி, பதனிடுதல், உற் பத்தி அலகுகளை மேம்படுத்த விவசாயிகளை ஒருங்கிணைத்து செயல்பட வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. சோற் றுக் கற்றாலை சாறுதயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யலாம். திட்டஅறிக்கையில் 10சதவீதம், அல்லது திட்ட மதிப்பீட்டில் 26சத வீதம் அல்லது அதிகபட்சம் ரூ.75லட்சம் இவற்றில் எது மிக குறைவோ அந்த தொகையை மானியமாக பெறலாம்.

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில் தோட்டக்கலை பூக்கள் அபிவிருத்தி, மூலிகைகள், மணம் தரும் தாவரங்கள், பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன்துறை போன்ற ஏதாவது ஒரு திட்டம் சார்ந்த முயற்சியாக இருக்க வேண்டும். திட்ட மதிப்பீடு ரூ.50லட்சம் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

விவசாயிகளை ஒருங்கிணைத்து நிறுவனம் ஏற்படுத்திட நிதி பங்கீடு அளிக்க விவசாயிகள் தயாராகி வருவதாக சிறு விவசாயிகள் நட்பமைப்பு திட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்

**கோமாரி நோயை கட்டுப்படுத்த மரபுவழி மருத்துவம்**

ஈரோடு, : பவானிசாகர் செல்வகணேசபுரத்தில் கால்நடை நலச்சங்கம் சார் பில் வருடாந்திர பேரவை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பேரவை தலைவர் சின்னசாமி தலைமை வகித் தார். ஆண்டறிக்கையை செயலாளர் துரைசாமி

வாசித்தார். வரவு செலவு அறிக்கையை பொருளாளர் முருகன் வாசித்தார்.கால் நடை சங்கத்தின்வளர்ச்சி எதிர்காலத்திட்டங்கள், கால் மற்றும் வாய்நோயான கோமாரி நோய் ஒழிப்பு முறை, கால்நடைகளுக்கான மூலிகை சிகிச்சை முறைகள் குறித்து முன்னாள் பொது செயலாளர் தசரதன், பணி நிறைவு பெற்ற கால்நடை ஆய்வாளர் சங்கத் தலைவர் ஆறுமுகம், கோவை மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம், காவிரி கருவூட் டல் அறக்கட்டளை தலை வர் ராதாகிருஷ்ணன் மற் றும் பலர் உரையாற்றினர். மூலிகை மூலமாக பாரம்பரிய சிகிச்சை அளிக்கும் முறை குறித்த கையேட்டை வெளியிட்டு கவுந்தப்பாடிஜெயம் பிராணி நல அறக்கட்டளை நிறுவனர் கோவிந்தராஜ் பேசினார். தமிழக அரசின் 11வது ஐந்தாண்டு திட்ட பணிக்குழு முன்னாள் உறுப்பினர் ரத்தினகிரி பேசியதாவது: தற்போது கால்நடைகள் கோமாரியால் பாதிக்கப்பட்டு அதிகளவில் இறந்துள்ளன. இதன் காரணமாக ஏழை, எளிய விவசாயிகள் கடும் பொருளாதார இழப்பை சந்தித்து வருகின்றனர். இந்நிலையை மாற்றிட தற்போது பணியில் உள்ள கால்நடை ஆய்வாளர்களும், பணி நிறைவு பெற்ற கால்நடை ஆய்வாளர்களும் கால்நடை மருத்துவ அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து கோமாரி நோயை முழுவதுமாக ஒழிக்க முழுமூச்சுடன் போர்கால அடிப்படையில்டையில் பணியாற்ற வேண் டும். கோமாரி நோய்க்கு மரபு வழி மருத்துவமான முற்றிய தேங்காய்ப்பூ, மஞ்சள், சீரகம், பூண்டு, வெந்தயம் ஆகியவற்றை தலா 50 கிராம் வீதம் எடுத்து இடித்து அதை ஊறவைத்து இடித்து பனை வெல்லம் சேர்த்து தினசரி 3 வேளைக்கும் நோய் கண்ட மாடுகளுக்கு கொடுத்து வந்தால் கோமாரி நோய் கட்டுபாட்டிற்குள் வந்து விரைவில் குண மா கும். கிராமங்களில் காலியாக உள்ள கால்நடை மருத்துவ கிளை நிலையங்களில் பயிற்சி பெற்ற கால்நடை ஆய்வாளர்களை கூடுதலாக நியமனம் செய்ய அனைத்து கால்நடை பண்ணைகளிலும்கால் நடை ஆய்வாளர் பயிற்சி தொடங்க வும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ரத்தினகிரி பேசினார். துணைத்தலைவர் அனந்தகிருஷ்ணன் நன்றி கூறினார். சின்னசாமி, முத்துசாமி, கோவிந்தராஜ், குப்புசாமி, மோகன்ராம் உட்பட பலர் கலந்து கொண்ட னர்.

## உற்பத்தி குறைவால் ஏலம் எடுக்க போட்டி தர்மபுரியில் வெண்பட்டுக்கூடு கிலோ ரூ520க்கு ஏலம்

சேலம், : உற்பத்தி குறைவால் வெண்பட்டுக்கூடுகளுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் ஒரு கிலோ அதிகபட்சமாக ரூ520க்கு ஏலம் போனது.

தமிழகத்தில் ஈரோடு, விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கரூர், வேடசந்தூர், பழனி, காங்கேயம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் வெண்பட்டுக்கூடுகளை அதிகளவில் உற்பத்தி செய்து வருகின்றனர். சேலம் மாவட்டத்தில் டி.பெருமாபாளையம், மன்னார்பாளையம், கொங்கணாபுரம், தலைவாசல், ஆத்தூர், மல்லூர் ஆகிய பகுதிகளிலும், நாமக்கல்லில் சேந்தமங்கலம், வெண்ணந்தூர், புதன்சந்தை ஆகிய பகுதிகளிலும், தர்மபுரியில் அரூர், பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஹள்ளி ஆகிய பகுதிகளிலும், கிருஷ்ணகிரியில் பர்கூர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் அதிகளவில் வெண்பட்டுக்கூடு உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டுக்கூடுகளை விவசாயிகள் சேலம், தர்மபுரி, பாலக்கோடு, பென்னாகரம் உள்ளிட்ட இடங்களில் உள்ள பட்டுக்கூடு அங்காடிக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு இருப்பதால் சேலம், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிகளுக்கு குறைந்த அளவே வெண்பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வருகிறது. இங்கு வரும் வெண்பட்டுக்கூடுகளை பட்டு நூற்பாளர்கள் போட்டி போட்டு ஏலம் எடுக்கின்றனர். இதனால் ஏலத்தில் வெண்பட்டுக்கூடுகள் அதிக விலைக்கு போவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது குறித்து வீராணத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது:

நான் கடந்த 20 ஆண்டாக வெண்பட்டுக்கூடு உற்பத்தி செய்து வருகிறேன். ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வெண்பட்டுக்கூடு

உற்பத்தி அதிக அளவில் இருக்கும். ஆனால் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதத்தில் பனி பொழிவு காரணமாக மூத்திரக்கூடுகள் அதிகரித்து பட்டுக்கூடுகள் சுத்தமாக இருக்காது. தற்போது குளிர், பனி பொழிவால் வெண்பட்டுக்கூடுகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பட்டுக்கூடு உற்பத்தியை நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் விற்பனைக்கு வரும் பட்டுக்கூடுகள் அதிக விலைக்கு போவதால் மகிழ்ச்சியாக உள்ளது,'' என்றார்.
இது குறித்து சேலம் பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது:
சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் மல்பரி சாகுபடி செய்து மஞ்சள், வெண்பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து வருகின்றனர். பொதுவாக வெண்பட்டுக்கூடு உற்பத்திக்கு சாதகமான குளிர், வெப்பம் இருக்க வேண்டும். அப்போது தான் நல்லமுறையில் பட்டுக்கூடு உற்பத்தியாகும். தற்போது பனி பொழிவு இருப்பதால் வெண்பட்டுக்கூடுகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. சேலம், தர்மபுரி பட்டுக்கூடு அங்காடிக்கு கடந்த சில நாட்களாக 500 முதல் 700 கிலோ வெண்பட்டுக்கூடுகள் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. அதனால் வெண்பட்டுக்கூடு வரலாறு காணாத அளவில் அதிகபட்சமாக கிலோ ரூ520க்கு ஏலம் போனது. இதுவரை ஏலத்தில் விலை கிலோ ரூ500க்கு மேல் போனதே இல்லை. தற்போது கிலோ ரூ520க்கு விற்பனையாகி சாதனை விலை கிடைத்துள்ளது. தர்மபுரி பட்டுக்கூடு அங்காடியில் நேற்று ஒரு கிலோ வெண்பட்டுக்கூடு அதிகபட்சம் ரூ520, குறைந்தபட்சம் ரூ376, சராசரி ரூ455 எனவும், சேலம் பட்டுக்கூடு அங்காடியில் சராசரியாக ரூ400 எனவும் ஏலம் போனது. இவ்வாறு பட்டு வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறினார்.

**காரிமங்கலத்தில் நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த பாரம்பரிய நெற்பயிர் சாகுபடி**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் ஒன்றியத்தில் பாரம்பரிய நெல் வகையான காட்டுயானம் என்கிற நெல் பயிரிடப்பட்டு வருகிறது.
காரிமங்கலம் ஒன்றியத்தில் கலெக்டர் விவேகானந்தன் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, கெட்டுக்கொட்டாய் கிராமத்தில் விவசாயி மாதப்பன் தோட்டத்தில், காட்டுயானம் என்ற பாரம்பரிய நெல் பயிரிடப்பட்டு, ஒவ்வொரு செடியும் 7 அடி உயரத்திற்கு வளர்ந்துள்ளதையும், அதில் விளைந்துள்ள

நெல்மணிகளையும் கலெக்டர் பார்வையிட்டார். எலுமிச்சனஅள்ளியில் விவசாயி சாம்ராஜின் தோட்டத்தில் குடைமிளகாய் பசுமைக்குடிலில் வளர்க்க பட்டுள்ளதையும் பார்வையிட்டார். இதுபற்றி கலெக்டர் கூறியதாவது:
காரிமங்கலம் ஒன்றியத்தில் கெட்டுக்கொட்டாய் கிராம விவசாயி மாதப்பன் தோட்டத்தில், நமது மூதாதையர்களால் பயிரிடப்பட்டு வந்த பாரம்பரிய வகையான காட்டுயானம் என்ற நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதனுடைய வளர்ச்சி மிகவும் அபரிமிதமாக உள்ளது. இந்த நெல்லை தற்போதைய தொழில்நுட்பமான திருத்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப்பட்டுள்ளது. உரம் தேவையின்றி வளர்ந்துள்ள இந்நெல்லில் களை வளர்ச்சி குறைந்து, நெற்பயிரின் வளர்ச்சி மிகுந்து காணப்படுகிறது. பூச்சிகளின் தாக்கம் எதுவும் இல்லை. இதிலிருந்து வரும் நெல்லை அடுத்த பயிருக்கு விதையாக பயன்படுத்தலாம். இந்த நெற்பயிர் மழை வெள்ளத்தையும், அதே சமயத்தில் வறட்சியையும் தாங்கி வளரக்கூடியது. நெற்பயிரின் இலைகளும், தண்டு பகுதிகளும் மிகவும் வீரிய வளர்ச்சியுடன் உள்ளதால் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இல்லை. பாரம்பரிய நெல் ரகங்கள் மாட்டுக்கு வைக்கோல், மண்ணுக்கு தழைச்சத்து, விவசாயிகளுக்கு நெல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக உள்ளது. மேலும் மண்வளம், நீர்வளம், நம் உடல் வளம் ஆகியவற்றை காக்கும் வலிமையுடையது.
பாரம்பரிய நெல்லான காட்டுயானம் எளிதில் ஜீரணமாக கூடியது என்றும் மலச்சிக்கலை நீக்கக்கூடியது என்றும் நரம்புகளை பலப்படுத்தும் தன்மை கொண்டது என்று கூறப்படுகிறது. நோய் எதிர்ப்பு சக்தி மிக்க இந்நெல்லை நம் முன்னோர்கள் பயிரிட்டு நோயற்ற வாழ்வை வாழ்ந்து வந்தனர். பலமடங்கு புரதச்சத்தும், நார்ச்சத்தும் மிக்க இந்நெல் இயற்கை தந்த வரமாக உள்ளது.
தர்மபுரி மாவட்டத்தில், அதிகளவில் விளைகின்ற நவதானியங்கள், தோட்டக்கலை பயிர்கள் உள்ளிட்ட அனைத்து வகை வேளாண் உற்பத்தி பொருட்களையும் நல்ல விலையில் சந்தைப்படுத்தவும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்யவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேளாண் தொடர்புடைய தொழில்களை விவசாயிகள், தொழில்முனைவோர் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.
அப்போது டிஆர்ஓ ராமர், வேளாண் துறை இணை இயக்குநர் மனோகரன்,

தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் கலைச்செல்வி ஆகியோர் உடனிருந்தனர்.

**ஆடுகள் விற்பனை மந்தம்**

பாலக்கோடு, : தர்மபுரி மாவட்டம் மாரண்டஹள்ளியில் வாரச்சந்தை நேற்று கூடியது. மாரண்டஹள்ளி மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் இருந்து சுமார் 500 ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. வெள்ளாடு ஒன்று ரூ5ஆயிரம் முதல் ரூ6 ஆயிரம் வரையிலும், வளர்ப்பு ஆடு ரூ2,500 முதல் ரூ3 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலை போனது. செம்மறி ஆடு 2 ஆயிரம் ரூபாய் முதல் ரூ4500 வரையிலும் விற்கப்பட்டது. கடந்த வாரத்தை விட விலை குறைந்திருந்த போதிலும், ஆடுகளின் விற்பனை மந்தமாக இருந்தது. மாவட்டம் முழுவதும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக் குவதால், வளர்ப்பு ஆடு களை வாங்க யாரும் ஆர்வம் காட்டவில்லை. கார்த்திகை மாதம் நடப்பதால் இறைச்சிக்காக ஆடுகளை வாங்குவதும் குறைவாக இருந்தது.

**கோமாரி நோய் தடுப்பு துண்டு பிரசுரம் வினியோகம்**

முத்துப்பேட்டை, : திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை உட்பட்ட பல பகுதிகளில் சமீப காலமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்பட்டு நூற்றுக்கணக்கான கால்நடைகள் பலியாகி வருகின்றன. இதற்கு பல்வேறு மருத்துவ முறைகள் பயன்படுத்தி வந்தாலும் அது கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு திருப்திகரமாக இல்லை என்று குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்தநிலையில் முத்துப்பேட்டை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் தஞ்சை கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர். புண்ணியமூர்த்தி கூறியுள்ள மருத்துவ ஆலோ சனை மற்றும் கோமாரி நோயை தடுக்க எவ்வாறு மருத்துவம் கொடுக்க வேண்டும் என்ற செயல் விளக்கம் அளித்த துண்டு பிரசுரத்தை தயார் செய்து முத்துப்பேட்டை மற்றும் சுற்றுப்பகுதியில் வினியோகித்து வருவதால் கால்நடை வளர்ப்பவர்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ள மருந்து தயாரிக்கும் முறை பயனுள்ளதாக இருப்பதாக கூறுகின்றனர். அதனால், அந்த துண்டு பிரசுரம் இந்தப் பகுதிகளில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதுகுறித்து தஞ்சை கால்நடை பல்கலைக்கழக டாக்டர் புண்ணியமூர்த்தி கூறுகையில், 2002ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பல்வேறு மருத்துவ முறைகள் கோமாரி நோயை தடுக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த காலத்தில் கால்நடைகளை கிராமத்தினர் முறையாக பராமரித்து வந்தனர். அதனால் பல்வேறு நோய்கள் தடுக்கப்பட்டன. தற்பொழுது முறையான பராமரிப்பு இல்லாததால் இதுபோன்ற நோய்கள் வரும் சூழ்நிலை உருவாகி உள்ளது. கோமாரி நோயை தடுக்க எளிய முறை சீரகம் 2 கரண்டி, மிளகு 2 கரண்டி, வெந்தயம் 2 கரண்டி, பூண்டு 4பல், மஞ்சள் துள் 2 கரண்டி, வெல்லம் 1 கட்டி, தேங்காய் பூ 1 மூடி இவற்றில் முதலில் சீரகம், மளகு, வெந்தயம் இவை மூன்றையும் சிறிது நேரம் ஊறவைத்து அத்து டன் பூண்டு, மஞ்சள் சேர்த்து அரைத்து வெள்ளம் மற்றும் தேங்காய் பூவுடன் பிசைந்து ஒரு மாட்டுக்கு தொடர்நது மூன்று நாட்கள் கொடுக்க வேண்டும். இதனை கடைபிடித்தால் முற்றிலும் கோமாரி நோய் தடுக்கப் படும். மேலும் சந்தேகங் களுக்கு எந்த நேரமும் 98424 55833 என்ற எண்ணுக்கோ அல்லது பல்கலைக்கழக அலுவலக போன் 04362 204009 என்ற எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவலை பெற்று பயன்பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்.

**பனிக்காலத்தையொட்டி கொண்டைக்கடலை சாகுபடி களையெடுக்கும் பணி விறுவிறுப்பு**

தர்மபுரி, : பனிக்காலத்தையொட்டி கொண்டைக்கடலை பயிரிட்டுள்ள நிலத்தில் களை எடுக்கும் பணியை விவசாயிகள் தீவிரமாக இறங்கி உள்ளனர். தமிழகத்திலேயே தர்மபுரி மாவட்டம் தக்காளி, வெண்டை, கத்திரி, பூசணி, பப்பாளி, குடைமிளகாய் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் விளைவிப்பதில் முதலிடம் வகிக்கிறது. பாலக்கோடு பகுதியில் விளைவிக்கப்படும் தக்காளி தர்மபுரி மட்டுமின்றி தென் தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் ஒன்றியத்தில், நாய்க்கன்கொட்டாய், கிருஷ்ணாபுரம், செம்மாண்டகுப்பம், குப்பூர், காரிமங்கலம், கம்பைநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் மானாவரி பயிர்களாக நிலக்கடலை, கொள்ளு, கேழ்வரகு, கொண்டைக்கடலை ஆகியவற்றை பயிரிடுகின்றனர்.

இந்நிலையில் தூதரையன்கொட்டாய், கம்பைநல்லூர், செட்டிக்கரை, எஸ்.கொட்டாவூர் பகுதிகளில் கொண்டைக்கடலை( உப்புக்கடலை) மானவாரிப்பயிராக பயிரிட்டுள்ளனர். இந்த பயிர் பனிக்காலத்தில் மட்டுமே பயிரிடப்படுகிறது. மழை பெய்யா விட்டாலும் பனியில் இருக்கும் ஈரப்பதத்தை உறிஞ்சி விரைவாக வளரக்கூடிய 90 நாள் பயிராகும்.
தர்மபுரி செட்டிக்கரை ஊராட்சி எஸ்.கொட் டாவூரில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் உப்புக்கடலை பயிரிட்டுள்ளனர். ஐப்பசி மாதத்தில் பயிரிடப்பட்ட இந்த பயிர் ஊடே வளர்ந்துள்ள களையெடுக்கும் பணியை துவக்கி உள்ளனர். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 20 மூட்டை உப்புக்கடலை மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**போச்சம்பள்ளியில் கொத்தமல்லி கட்டு ரூ5 ;**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளி வாரச்சந்தையில் வரத்து அதிகரிப்பால் கொத்தமல்லி, புதினா விலை சரிந்தது. ஒரு கட்டு கொத்தமல்லி ரூ5 க்கும், 2 கட்டு புதினா ரூ5 க்கும் விற்பனை ஆனதால், பொதுமக்கள் போட்டி போட்டு கொண்டு வாங்கி சென்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் வாரச்சந்தை பிரசித்தி பெற்றதாகும். தங்கம் முதல் தக்காளி வரை இங்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று நடைபெற்ற சந்தையில் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் விளைபொருட்களை விற்பனை செய்தனர். இதில், சூளகிரி பகுதியில் இருந்து கொத்தமல்லி, புதினா தழை வரத்து அதிகளவில் இருந்தது.
இதனால் கடந்த வாரம் ரூ10க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கட்டு கொத்தமல்லி தழை, நேற்று ரூ5 ஆக குறைந்தது. இதே போல் புதினா இரண்டு கட்டு ரூ5 க்கு விற்பனை ஆனது. மருத்துவ குணம் கொண்ட கொத்தமல்லி, புதினாவை சட்னி செய்து சாப்பிட்டால் பித்தம், வாந்தி, அஜீரண கோளாறு மற்றும் வயிற்றுப்புண் குணமாகும் என்பதாலும், ரத்தம் சுத்திகரிக்கும் என்பதாலும், பொதுமக்கள்

கொத்தமல்லி, புதினா கட்டுகளை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

**ஆமணக்கு பயிரில் காவடிப்புழு தாக்குதலை தடுக்கும் வழிமுறைகள்**

நாமக்கல், : ஆமணக்கு பயிரில் காவடிப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து நாமக்கல் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் முரளிதரன் தெரிவித்திருப்பது:

நாமக்கல் மாவட்டத்தில், திருச்செங்கோடு, எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம் உள்பட பல வட்டாரங்களில் ஆமணக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய மழைக்குப்பின் (ஆமணக்கு) கொட்டமுத்து பயிர் நன்கு செழித்து வளர்ந்து காணப்படுகிறது. இதில் காவடிப்புழு என்ற பூச்சியின் தாக்குதல் வருவதற்கு வாய்ப்புள்ளது. எனவே காவடிப்புழுவை கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு வழிமுறைகளை, விவசாயிகள் பின்பற்ற வேண்டும்.

ஆமணக்கு பயிரில், சிறிய காவடி புழுக்கள், இலைகளில் உள்ள பச்சையத்தை சுரண்டி சாப்பிடும். இதனால், இலைகள் சல்லடை போல் அரித்து காணப்படும். வளர்ந்த காவடி புழுக்கள் ஆமணக்கின் இலைகளில் உள்ள நரம்பை மட்டும் விட்டு, இலைகள் முழுவதையும் சாப்பிடுவதால் மகசூல் குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். பச்சை கலந்த பழுப்பு நிற முட்டைகள், இலைகளின் மேலும், இளங்குருத்திலும் காணப்படும். அதை கட்டுப்படுத்த, முதலில் வளர்ந்த காவடிப்புழுக்களை சேகரித்து அழிப்பது நல்லது. முட்டைக்குவியல்கள் உள்ள இலைகளை சேகரித்து அழிப்பது சிறந்தது. சிறு புழுக்களாக, ஒரே இலையில் இருந்து கொண்டு, சுரண்டி சாப்பிடும்போது, தாக்கப்பட்ட இலைகளை கிள்ளி எடுத்து சேகரித்து அழிக்க வேண்டும்.

காவடிப் புழுக்களின் தாக்குதல், பொருளாதார சேத நிலையைக் கடக்கும் போது,

பயிர் பாதுகாப்பு மருந்துகளை பரிந்துரையின்படி தேவையான சரியான அளவு தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். மழைக்கு பின் ஆமணக்கு பயிரை நன்கு

கண்காணித்து பயிர் பாதுகாப்பு நடவடிக்கையை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**தரம் குறைவால் மலிவு விலை அரிசி விற்பனை மந்தம்**

சிவகாசி, : சிவகாசியில் மலிவு விலை அரிசிக்கு மக்களிடம் போதிய வரவேற்பு இல்லாததால், விற்பனை குறைந்து விட்டது.

அரிசி வ¤லை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது. பொன்ன¤ ரக அரிசி கிலோ ரூ40 முதல் ரூ.55 வரையிலும், ஐஆர் 20 அரிசி ரூ.40 வரையிலும் விற்கப்படுகிறது. அரிசி விலை உயர்வால் நடுத்தர மக்கள் பெரும் பாதிபபுக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் வெளி மார்க்கெட்டில் அரிசி விலை உயர்வை கட்டுபபடுத்த, கூட்டுறவு அங்காடிகள் மூலம் மலிவு விலை அரிச¤ விற்கப்பட்டது. விருதுநகர் மாவட்டத்தில் கடந்த மே 11ம் தேதி கிலோ ரூ.20க்கு மலிவு விலை அரிசி விற்பனை திட்டம் தொடஙகப்பட்டது.

சிவகாசியில் ரத்தினவேல் காரனேசன் மின¤ கூடடுறவு அங்காடி, வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் எதிரே, திருத்தங்கல் பாண்டியன் நகர், திருத்தங்கல், ஞானகிரிரோடு, நாரணாபுரம் ரோடு, சித்துராஜபுரம், ஜவுளி கடை வீதிஆகிய 8 கூட்டுறவு கடைகளில் மலிவு விலை அரிச¤ விறகப்படுகிறது.

இந்த கடைகளுக்கு முதல் கட்டமாக 2 ஆயிரம் கிலோவும், இரண்டாம் கட்டமாக 2 ஆயிரம் கிலோ அரிசியும் அனுப்பப்பட்டது. 50 கிலோ பைகளிலும் விறபனைக்கு வைத்துள்ளனர். ஒரு கிலோ, இரண்டு கிலோ சில்லரை விலையிலும் விற்கப்படுகிறது.

மலிவு விலை அரிசி ஒவ்வொரு முறையும் ஒரு ரகமாக வருவதால் பெரும்பாலான மக்கள் ஒரு கிலோ, இரண்டு கிலோ வாங்கி சமைத்து பார்த்து நன்றாக இருந்தால் மட்டுமே மேலும் வாங்குகின்றனர். இதனால் மலிவு விலை அரிசி விற்பனை மந்தமாக உள்ளது.

இதுபற்றி பொதுமக்கள் கூறுகையில், '' ஒரு கிலோ அரிசி 20ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் இந்த அரிசி தரமானதாக இல்லை. சில நேரங்களில்

ரேசன் கடைகளில வழஙகப்படும்  இலவச அரிசி போன்று உள்ளது. இதனால் எங்கள் தேவைக்கு மீண்டும் அரிசி கடைக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. இத்திட்டம் துவங்கப்பட்டதில் இருந்து தற்போது வரை 6 ஆயிரத்து 500 கிலோ அரிசி மட்டுமே விற்பனை ஆகியுள்ளது. அரசு ஒரே ரகத்தில் மலிவு விலை அரிசியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றனர்.

**மழையின்றி வாடும் சோளப்பயிர்கள் தேனி விவசாயிகள் கவலை**

தேனி, : தேனி பகுதியில் பயிரிடப்பட்டிருந்த சோளப்பயிர்கள் மழையின்றி வாடுவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தேனி அருகே தப்புக்குண்டு, தாடிச்சேரி, கொடுவிலார்பட்டி, வெங்கடாசலபுரம் உள்ளிட்ட கிரா மங்களில் மானாவரி நிலங்களில் மழைபெய்யும்போது சோளம் பயிரிடப்படுகிறது. சமீபத்தில் தேனியில் பெய்த மழையைடுத்து விவசாயிகள் சோளம் பயிரிட்டனர். இந்நிலங்களில் தற்போது சோளம் விளைந்து கதிர்கள் பால் பிடித்து பருக்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் மழை பெய்யாததால் சோளக் கதிர்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மழை பெய்யும் காலத்தில் தற்போது பனி பெய்து வருவதால் சோளக்கதிர்கள் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மழையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் மழை ஏமாற்றியதால் பெரும் கவலையில் உள்ளனர்.

இதுகுறித்து தாடிச்சேரி விவசாயி தங்கராஜ் கூறுகை யில், மழையை நம்பி மானா வாரி நிலங்களில் உலவு செய்து சோளம் பயிரிட் டோம். ஏக்கருக்கு ரூ.4 ஆயிரம் வரை செலவாகிறது. நன்கு விளைந்தால் ஏக்கருக்கு 15 குவிண்டால் வரை சோளம் கிடைக்கும். தற் போது பருவமழை முறையாக பெய்யாமல் ஏமாற்றி வருகி றது. இதனால் சோளம் விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இதனால் அறுவடையின்போது போதிய விளை ச்சல் இல்லாமல் மக சூல் குறையும் வாய்ப்பு உள் ளது. மேலும் சோளத்தின் தரம் குறையும் அபாயமும் உள் ளது. இதனால் விளைந் தும் அதை நல்ல விலைக்கு விற்க முடியாத நிலை உள்ளது என கவலை தெரிவித்தார்.

**சின்னமனூர் பகுதியில் 2ம் போகம் துவங்குவதில் விவசாய பணிகள் மந்தம்**

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் மழை இல்லாததால் 2ம் போகம் நெல் சாகுபடி பணிகள் துவங்குவதில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது.
சின்னமனூர் பகுதியில் முல்லைப்பெரியாற்றின் பாசனத்தால் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது. வழக்கம்போல் அணையில் ஜூன் மாதம் 1ம் தேதி இரு போகத்திற்கும் தண்ணீர் திறக்கப்படும். பல வருடங்களாக பருவ மழை காணா மல் போய்விட்டதால் நீர் பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் தேக்கம் இல்லாததால் அணையி லும் நீர் மட்டம் குறைந்துள்ளது. இதனால் 2 மாதம் தாமதமாகவே இரு போகத்திற்கும் நடவும், அறுவடையும் நடந்து வருகிறது.
நடப்பாண்டில் கேரளா மலைப்பகுதியில் நல்ல மழை பெய்ததால் அணையில் 137 அடி வரை உயர்ந்தது. 28ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டவுடன் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சுமார் 15 ஆயிரம் ஏக்கரிலும் முதல் போகம் நடவு பணிகள் துவங்கி 120 நாட்களில் விளைவித்து அறுவடையையும் முடித்து விட்டனர். தற்போது நல்ல மழை பெய்யும் சூழ்நிலையில் சரிவர மழைபெய்யாத காரணத்தினால் அணையில் தண்ணீர் மட்டம் 117 அடி மட்டுமே உள்ளது.
இந்த தண்ணீர் இரண்டாம் போகத்திற்கு சரியாக கை கொடுக்குமா? அல்லது நடவு செய்த பின்பு இடையில் பற்றாக்குறையாக போய்விடுமா என விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். அதனால் சின்னமனூர் பகுதியில் இரண்டாம் போகத்திற்கான ஆரம்பகட்ட பணிகள் இன்னும் சரிவர துவங்காமல் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். அதன்படி சின்னமனூர் பகுதியில் பெரும்பாலும் உள்ள இடங் களில் விவசாயிகள் 2ம் போகத்திற்காக சரிவர பணிகளை துவக்காமல் உள்ளனர்.

**கமுதியில் கனமழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கமுதி, : கமுதி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் திடீர் கன மழை பெய்ததால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கியது. இதனால் பொது மக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்
தமிழகத்தில் கடந்த 2 ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவு வடகிழக்கு பருவ மழை கைகொடுக்கவில்லை. குறிப்பாக ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மற்றும்

திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அவ்வப்போது பெய்த மழையை நம்பி விவசாயிகள் நடவு செய்த பயிர் பெரும் இழப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் இந்த ஆண்டு அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்க வேண் டிய வடகிழக்கு பருவமழை காலதாமதமாக தொடங்கியது. தமிழகத்தின் வடமாவட்டங்களில் ஓரளவிற்கு பெய்தது. ஆனால் தென் மாவட்டங்களில் ராமநாதபுரம் உள்ளிட்ட சில மாவட்டங்களில் அவ்வப்போது லோசான மழை பெய்தது. இந்த மழைய நம்பி பயிர் நடவு செய்த விவசாயிகள் பெரும் கவலையில் இருந்தனர். மழை பெய்தால் மட்டுமே விவசாயத்தை காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால், கடந்த ஆண்டை போல் நஷ்டத்தை சந்திக்க வேண்டியிருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று திடீர் என்று ராமநாதபுரம் மாவட்டம் கமுதி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகு தியில் நல்ல மழை பெய்தது. அரை மணி நேரத்திற்கு மே லாக நீடித்த இந்த மழையால் தாழ்வான பகுதிகள், சா லை யில் தண்ணீர் தேங்கியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 3.12.2013

### காபி ஏற்றுமதி 2.94 லட்சம் டன்



நடப்பு 2013–ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் (ஜனவரி – நவம்பர்) நாட்டின் காபி ஏற்றுமதி சென்ற ஆண்டின் இதே காலத்தை காட்டிலும் 1 சதவீதம் அதிகரித்து 2.91 லட்சம் டன்னிலிருந்து 2.94 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது.

காபி உற்பத்தியில் உலக அளவில் முன்னிலை வகித்து வரும் பிரேசில், கொலம்பியா மற்றும் வியட்நாம் போன்ற பல்வேறு நாடுகளில் உற்பத்தி மிகவும் அதிகரிக்கும் என்ற நிலைப்பாட்டால் சர்வதேச அளவில் காபி விலை மிகவும் குறைந்துள்ளது.

இது மேலும் சரிவடைவதற்கு முன்னர் இந்திய காபி உற்பத்தியாளர்கள் காபியை வெளிநாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்துள்ளனர் என காபி வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மொத்த காபி ஏற்றுமதியில் முதல் 11 மாதங்களில் ரோபஸ்டா வகை காபி ஏற்றுமதி 3 சதவீதம் அதிகரித்து 1.52 லட்சம் டன்னிலிருந்து 1.57 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அராபிகா காபி ஏற்றுமதி 6.4 சதவீதம் சரிவடைந்து 55,570 டன்னிலிருந்து 52,003 டன்னாக குறைந்துள்ளது.

முதல் 11 மாதங்களில் இந்தியாவிலிருந்து அதிக அளவில் காபியை இறக்குமதி செய்துள்ளதில் இத்தாலி (73,209 டன்) முதலிடத்தில் உள்ளது. அடுத்தபடியாக நம் நாட்டிலிருந்து ஜெர்மனிக்கு 29,089 டன்னும், ரஷ்யாவுக்கு 19,274 டன்னும், பெல்ஜியத்திற்கு 16,680 டன்னும் ஏற்றுமதி ஆகியுள்ளது.

**ஆலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ரூ.32 கோடி கடன் வழங்கி சாதனை**



ஆலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் ரூ.32 கோடி கடன்கள் வழங்கி உள்ளது.

கடன்கள்

ஆலங்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

ஆலங்குளம்,

நடப்பு தணிக்கை ஆண்டில் ரூ.3193 லட்சம் கடன்கள் வழங்கி உள்ளது.

விவசாயத்துக்கு குறுகிய காலக்கடனாக ரூ.390 லட்சமும், புதிய வீடு கட்டுவதற்கு ரூ.45 லட்சமும், வீடு மற்றும் சொத்து அடமானக்கடனாக ரூ.301 லட்சமும்,

நகைக்கடனாக ரூ.2095 லட்சமும், மேலும் மத்திய காலக்கடன், நகைக்கடன், விவசாய நகைக்கடன், டெப்பாசிட் மீது கடன், பண்ணைசாரா கடன், வீட்டுக்கடன் போன்றவை மூலம் ரூ.3193 லட்சத்திற்கு கடன்கள் வழங்கி உள்ளது.

மேலும் டெப்பாசிட் தொகையாக ரூ.2060 லட்சம் பெற்று மாவட்டத்திலேயே சிறந்த சங்கமாக தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளது. மத்திய கூட்டுறவு வங்கியில் வட்டி இல்லா கடனாக பயிர்கடன் மற்றும் குறைந்த வட்டி கடனாக ஐ.ஆர்.டி.பி. கடன்களை பெற்று வருகிறது. பாதுகாப்பு பெட்டக வசதி, கணக்குகள் முழுவதும்

கனிணி மயமாக்கப்பட்டது. மண் பரிசோதனை மையம், கூட்டுறவு மருந்துக் கடை நடத்துதல் ஆகிய பணிகளை செய்து வருகிறது.

பாராட்டு

சங்கம் தொடர்ந்து 27 ஆண்டுகளாக லாபத்தில் செயல்பட்டு அதன் உறுப்பினர்களுக்கு 14 சதவீத டிவிடெண்ட் வழங்கி வருகிறது. 60–வது கூட்டுறவு வாரவிழாவில் மாவட்ட அளவில் சிறந்த சங்கமாக தேர்ந்து எடுக்கப்பட்டு பாராட்டு கேடயம் பெற்றுள்ளது. இந்த தகவலை நெல்லை மாவட்டக் கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குனர் வி.தி.ஜெபக்குமார் சுதந்திரன் தெரிவித்தார்.

**ராமேசுவரத்தில் 2–வது நாளாக 4 மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது.**



புதிய காற்றழுத்த தாழ்வு நிலை

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இதனால் ராமேசுவரம் பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது.

மதுரை

நேற்று 2–வது நாளாக காலை முதலே மழை பெய்வதற்கான அறிகுறியுடனும் கருமேக கூட்டங்களாகவே காட்சியளித்து வந்தது.

தொடர்ந்து பகல் 12 மணி அளவில் பெய்யத்தொடங்கிய பலத்த மழையானது இடைவிடாமல் சுமார் 4 மணி நேரத்திற்கு மேலாக பலமாகப் பெய்தது. பலத்த மழையால் சீதா தீர்த்தம் அருகில் கோவில்–பஸ் நிலைய சாலையில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் அனைத்த வாகனங்களும் மழைநீரில் தத்தளித்தடி சென்றன. இதே போல் நகரசபை அலுவலகம் எதிரிலும் தனுஷ்கோடி சாலையிலும் மழை நீர் ஆறாக

ஓடியது. பலத்த மழை பெய்தபோதும் நேற்று சர்வ அமாவாசையாக இருந்ததால் பக்தர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் அக்னி தீர்த்தக் கடலில் நீராடியதுடன், கோவிலில் உள்ள 22 தீர்த்தங்களிலும் மழையில் நனைந்தபடியே நீராடினர்.

கடலுக்கு சென்ற மீனவர்கள்

இதே போல் பாம்பன், தங்கச்சி மடம் பகுதிகளிலும் இடைவிடாமல் பகல் முழுவதும் பலத்த மழை பெய்தது. பாம்பன், வடக்கு கடல் பகுதி கடல் கொந்தளிப்பாகவே காணப்பட்டு வந்தது. பலத்த மழை பெய்தபோதும் ராமேசுவரத்திலிருந்து நேற்று காலை 400–க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 100–த்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்துறை அதிகாரிகளிடம் முறையான அனுமதி டோக்கன் பெற்று மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

ராமேசுவரத்தில் கடந்த பல மாதங்களாக மழையே இல்லாமல் இருந்ததால் அனைத்து வீடுகளில் உள்ள கிணறுகளும் தண்ணீரே இல்லாமல் வற்றிய நிலையில் காட்சியளித்தன. இந்த நிலையில் நேற்ற 2–வது நாளாக பெய்த பலத்த மழையால் கிணறுகளில் ஓரளவு தண்ணீரின் மட்டமும் உயர்ந்துள்ளதால் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.